بسم الله الرحمن الرحيم

அல் கலாம்

AL-KALAM

பத்திராதிபர் :— கூ. அ. அப்துல் மஜீது

வால்யூம். 2	1925ஹு ஜனவரிமீ	பகுதி. 1

சத்தியப்பிரசாரமும் உத்தமரும்.

ஒவ்வொரு காலத்திலும் ஒருபுறத்தில் ஆயிரக்கணக்கான உலமாக்களும், மஷாயிக்களும் இருக்கின்றனர். கல்வி கற்பதும், பிரசங்கங்களைப் புரிவதும், தியானங்கள் செய்வதும், மஸ்ஜிதுகளில் வணங்குவதுமாகிய இவைகள் தோற்றத்தில் எவ்விதக் குறைவுமின்றி வெகு மும்மரமாய் நடைபெறுகின்றன. வணக்க ஸ்தலங்களில் வைதீகக் கோஷ்டியார் ஒன்று கூடி குர்ஆன் ஷரீபை யோதுவதும், சாஸ்திர சம்மந்தமான கிரந்தங்களை வாசிப்பதும், ஜெபஞ் செய்வதுமாகிய இவைகளின் ஓசை மண்டலத்தை அளாவி நிற்கின்றது.

மற்றொருபுறத்தில், அநியாயம், தீச்செயல், மோசமாகியவைகள் சூழ்ந்துகொண்டு கெடுதியும் ஒழுக்கமற்ற செய்கைகளும் அபிவிர்த்தி யடைந்துகொண்டே போகின்றன. உண்மையும் சத்தியத்தின் ஒளியும் திரையால் மறைக்கப்படுகின்றன. "பித் அத்து" என்னும் நாகரீகமற்ற நூதனச் செய்கைகள், வீண் சடங்கு சாங்கியங்கள், விலக்கப்பட்ட துர்க்கிர்த்தியங்கள் முதலிய கொடிய பாதகச் செய்கைகளுக்கு விசேஷ மதிப்பேற்பட்டிருக்கின்றன. சத்தியப் பிரசாரகரும், உண்மைக் குழைப்போரும் சிக்ஷிக்கப்படுகின்றனர். அல்லாஹுதஆலாவின் பூமியில், அவனுடைய பரிசுத்தமான வார்த்தைகளையும் நீதியையும் உரைப்பது குற்றமாம், அநியாயம், மோச

வஞ்சகம் முதலியவைகளுக்குப் பெருங் கீர்த்தியுண்டாம். நற்செய்கைகளும் சத்தியத்தின் ஊழியமும் உயிரற்று சவமாக்குப்பட் டிருக்கின்றன. மேற்கூறப்பட்டுள்ள துக்ககரமான சம்பவங்கள் பட்டப்பகலிலும் பஹிரங்கமாகவும் நிகழ்கின்றன.

மதரஸாக்களிலிருப்பவர்கள் குருடர்களாகி விடவில்லை. வணக்கஸ்தலங்களிலுள்ளவர்கள் செவிடர்களாகிவிடவில்லை. அவர்களின் நேத்திரங்கள் பார்க்குஞ் சக்தி வாய்ந்தவைகளாகவும், செவிகள் கேட்குந்திறமை யுள்ளவைகளாகவுமே யிருக்கின்றன. ஆயினும் அவர்களுடைய அகக்கண்கள் குருடாகிவிட்டன. அவர்களுடைய ஹிருதயங்களின் செவிகள் செவிடாகி உணர்ச்சியற்றதாய் விட்டன. ஆகவே அவர்கள் பார்ப்பதாலும் கேட்பதாலும் எப்பலனு மேற்படவில்லை. இக்கொடியவர்களின் (உலகசம்மந்தமான பேராசை அதிகரித்து) ஹிருதயங்கள் மரித்துப் போய்விட்டதால் நற்குணங்கள் இவர்களை விட்டுப் பிரிந்துபோயின. இவர்களுள் சோம்பேறித்தனம் குடிகொண்டிருப்பதால் இவர்களை, ஒவ்வொரு அணுக்களும் மலைகளைப்போல் தோன்றிப் பயமுறுத்துகின்றன. சத்தியப் பிரசாரர்களைப் பரிக்ஷிப்பதற்காகவுள்ள முட்கள், இவர்களைக் கொடிய ஆயுதங்களைப்போல் நடுங்கச்செய்கின்றன.

சுய நலத்தைக் கோறியும் உலகசம்பந்தமான இச்சையை நினைத்தும் அலைகளைப்போல் கண்ணீர் சொரிகிறவர்களின் கண்களில், உண்மை சத்தியம் முதலியவைகளின் பரிதாபகரமான நிலையைக் கண்டு அழ ஒரு துளி நீரையும் காணக்கூடவில்லை. சுயநலப்பிரீதியும், பெண்டு பிள்ளைகளின் பற்றும் குடிகொண்டிருக்கிற ஹிருதயத்தில் அல்லாஹுத ஆலாவுடைய விசுவாசமும் நட்பும் ஜீவித்திருக்க முடியுமா?

வணக்கங்களில் கியாதிபெற்ற மகான்கள் இரவெல்லாம் தூக்கத்தை யொழித்து ஆயிரமணிகொண்ட ஜெபமாலையின் உதவியால் ஜெபித்துக்கொண் டிருப்பார்கள். ஆயினும் அல்லாஹுத ஆலாவின் லக்ஷக் கணக்கான பிரஜைகள் அநியாயத்தின் புழுதியில் விழுந்து புரண்டுகொண்டிருப்பதும், நியாயம் ஆதரவற்று தனக்குதவி புரியும்படி போடுங் கூச்சலும், அவ்வணக்கஞ் செய்வோருக்கு உணர்ச்சியை யுண்டுபண்ணவில்லை. மதரஸாக்களில் கல்விகற்கும் வகுப்பார் பற்பல நூல்களின் ஏடுகளைப் புரட்டி அதிலுள்ள நுட்பமான விஷயங்களை எளிதில் கண்டுகொள்வதற்கு முயற்சிக்காம லிருப்பதில்லை. சுன்னத்தைப் பின்பற்ற வேண்டுமென்றும், நல்லதை ஏவிக் கெடுதிகளை

யகற்ற வேண்டுமென்றும்; ஹதீதுகளில் வரையப்பட்டிருப்பது சம்மந்தமாய் வியாக்கியானஞ் செய்யவேண்டியதைப் பொருத்து விவாதம் புரிவதில் ஒவ்வொருவரும் தங்கள் தங்களின் சாமர்த்தியங்களை வெளியிடாமலிருப்பதில்லை. சங்கங்களிலும், பள்ளிவாசல்களிலும், ஜனத்திரள்களின் மத்தியிலும் பிரசங்கஞ்செய்து; "காலல்லா," "காலர்ரசூல்" ஆகியவைகளை படுத்தடுத்து ஓதி, நற்காரியங்களை விடாதீர்கள் என்றும் ஓயாது ஜெபஞ் செய்யுங்களென்றும் வாயால் மொழிவதில் எவ்விதக்குறைவும் ஏற்படவில்லை. ஆனால் இதேசந்தர்ப்பத்தில் "குப்ரு" வழிகேடு, "பித்அத்து," விலக்கப்பட்டவைகள் முதலிய துர்க்கிர்த்தியங்களாற் செய்யப்படும் அநியாயங்களைச் சஹிக்க முடியாமல் ஒருபுறத்தில் சில உத்தமர்கள் மட்டும் ஓயாது கதறுகின்றனர். ஆதலின் இவர்களே சத்தியப்பிரசாரர்களாகும்.

சத்தியப்பிரசாரர்களின் ஏழ்மைத்தனமானது விசனமுற்று சிரசில் அடித்துக்கொண்டே நாலுபக்கங்களிலும் திரிகிறது. அல்லாஹுத ஆலாவுடைய பூமியின் பலபாகங்களிலிருந்தும், "வாஷரிஅதா வாதினு! வாமுசிபதா! வாவைலா!" என்னும் கூக்குரல் வானத்தை அளாவி நிற்கின்றது. சத்தியப் பிரசாரர்களின் பரிதாபகரமான நிலையைக் கண்டு உலகத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துக்களும் அழுகின்றன. ஆயினும் ஆயிரமணிகள் கொண்ட ஜெபமாலையைக் கையில் தாங்கி ஜெபித்துக் கொண்டிருப்பவர்களுக்கும், மதரசாக்களில் விவாதஞ்செய்து தங்களுடைய சாமர்த்தியங்களை நிரூபித்துக் கொண்டிருப்பவர்களுக்கும் மற்ற விஷயங்களைப் பார்க்கவும் கவனிக்கவும் அவகாசமேற்படவில்லை. சத்தியத்திற்கும் உண்மைக்கும் விரோதமாய்ச் செய்யப்படும் அநியாயங்கள் ஜெயித்துக்கொள்ளுமாயின் இவர்களுடைய வணக்கங்களாலும், இவர்களின் கல்வியாலும் ஏற்படும் நன்மை யாதோ? சமூகத்தின் முக்கியஸ்தர்கள் அடக்கப்பட்டு நல்ல ஆத்மாக்கள் உயிரற்று, சத்தியத்திற்குப் பதிலாய் அசத்தியமும், உண்மைக்கு மாற்றமாய்ப் பொய்யும், நீதிக்குப் பதிலாய் அநியாயமும், சுன்னத்திற்குப் பதிலாய் பித் அத்தும் ஆதிக்கம் பெற்று விடுமாயின் சக்தியற்றவர்கள் வணங்கவும், கல்வி கற்கவும் சாத்தியப்படுமா?

உலகத்தில் கல்வி கற்றவர்களுக்குக் குறைவில்லை. பிரசித்தி பெற்ற மகான்களுக்குப் பஞ்சமில்லை. ஆயினும் இவர்களுக்குத் தங்கள் காலத்திய துர்க்கிர்த்தியங்களை யகற்றி சத்தியத்தை நிலை நிறுத்துவதற்கு வேண்டிய அருளும் தைரியமுமற்றவர்களா யிருக்கின்றனர்.

கல்விவான்களும், பெரிய மகான்களும் எடுத்தடி வைக்கத் தைரியமின்றி நடுக்க முற்றிருந்த நல்வழிச் செல்வதற்கு திடீரென சில உத்தமர்கள் தோன்றி விடுவார்கள். இவர்கள் அவ்வழியில் சாதாரண நடையாலன்றி வேகமாய் ஓடியும் ஓடுவர். அவ்வழியில் நேரும் துன்பங்களை லக்ஷியஞ்செய்யார். வழிமறிக்கும் மலைபோன்ற தேவதைகளைக் கண்டு அஞ்சார். மகான்களென்போரும் கீர்த்தி வாய்ந்த கல்விவான்களும் எவ்வைகளைக்கண்டு நடுக்க முற்றிருந்தார் களோ, அவைகளை இவ்வுத்தமர்கள் பொருட்படுத்த மாட்டார்கள். இவ்வுத்தமர்களின் சத்தியமான வார்த்தைகள் உலகத்தை நடுங்கச் செய்துவிடும். இவ்வுத்தமர்களின் காலத்தில் எத்துணை பெரிய மகான் களிருந்தபோதிலும், இவர்களுக்குள்ள கீர்த்தியின் வாடையை எவ ரும் அனுபவிக்கமுடியாது. கல்விவான்கள், மகான்கள், அவற்ற வணக்கம் புரிகிறவர்கள், சாதாரண ஜனங்கள் முதலிய ஒவ்வொரு வரும் இவ்வுத்தமர்களையே பின்பற்றிநிற்பார்கள்.

உஸ்வயெநூஹ்.

"நூஹ்" அலைஹிஸ்ஸலாமின் சரித்திரத்தைக் குர் ஆன்ஷரீபில் வரையப்பட்டிருக்கின்றது. அச்சரித்திரத்தின் மூலமாய் நாம் அறிந்துகொள்ள வேண்டியவைகளாவன:—

1. அல்லாஹுத ஆலாவை மறந்து அவனின் சட்டதிட்டங்கள் அவமதிக்கப்பட்டு, அநியாயம், துர்க்கீர்த்தியம் முதலியவைகள் உலகத்தைச் சூழ்ந்துகொண்டு கல்வியென்பதே ஞானத்தை மறைக்கக் கூடியதாயும், நாகரீகமென்பதே வழி கெடுப்பதாயு மேற்பட்டுவிட்ட காலத்தில், சத்தியப் பிரசாரஞ் செய்வது உண்மையான முஸ்லிம் களின் கடமையாகும். இக்கடமையை நிறைவேற்ற முடியாமல் தடுப் பதற்கு எத்துணை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பினும், பிரசங்கம் புரியும் நாவை யடக்குவதற்குக் கொடிய சட்டங்கள் இயற்றப்பட் டிருப்பினும், எழுதுகோலின் சுதந்தரத்தைப் பறித்துக் கொள்வதற் காகப் பற்பல ஆக்டுகளை நிறைவேற்றினாலும், இவ்விடையூறுகளின் மூலமாய் எப்படிப்பட்ட கஷ்டங்களை யனுபவிக்க நேரிடினும் உண்மை முஸ்லிம்கள் மௌனவிரதம் பூணக்கூடாது. அசத்தியத்தை எதிர்த்து பிரசாரம் புரிவதற்குப் பஹிரங்கமாக வெளிக்கிளம்ப வேண்டும்.

2. சத்தியப் பிரசாரம் புரிவதற்காக முற்படுகிறவர்கள் தங் களின் கடமையை நிறைவேற்றும்போது தங்களுக்குப் பெருங்

கீர்த்தி ஏற்படவேண்டுமென்ற சிந்தனையிருக்கக் கூடாது. அதிகார வர்க்கத்தாரின் தோற்றத்தில் படும்படி தங்களுக்குக் கீர்த்தியைச் சம்பாதித்துக் கொண்டு, பிறகு வேலை செய்யலாமென சத்தியப் பிரசாரர்கள் எண்ணக்கூடாது. இவ்வெண்ணம் உபயோகமற்றதும் குற்றமுள்ளதுமாகும். சத்தியப்பிரசாரர்களின் நிலைமை பலஹீனமானதென்று கூறப்படும். இவர்கள் அவமதிக்கவும் படுவார்கள். பாதகர்கள் இவர்களைப் பரிகாசமும் செய்வார்கள். இவர்கள் பொய்யர்களென்றும், வீணர்களென்றும், பிழைப்பற்றவர்களென்றும், பொல்லாதவர்களென்றும், அறிவிக்கப் படுவார்கள். ஆயினும், உத்தமர்களான சத்தியப் பிரசாரர்கள் தங்களுடைய கடமையை நிறைவேற்றியே தீருவர்கள்.

3. சத்தியப் பிரசாரர்கள் எண்ணிக்கையில் அதிகமாயிருக்க மாட்டார்கள். சில சாதாரண பொது மக்களே சத்தியப் பிரசாரர்களின் துணையாளர்களாக விருப்பார்கள். இவர்களும் பார்ப்பவர்களுக்குக் கேவலமாகவே தோன்றுவார்கள். இவர்கள் அநியாயக்காரர்களுக்கு சந்தா கொடுத்தவர்களாயும், அவர்களின் தாக்ஷண்யத்தை விரும்பி செய்யக் கூடாதவைகளை செய்தவர்களாயும், வெறுந் தீர்மானங்களை நிறை வேற்றினவர்களாயு மிருக்கமாட்டார்கள். சதி, மோசம், சூழ்ச்சி முதலியவைகளால் இவர்கள் தங்களின் சக்திகளை அபிவிர்த்தி செய்துகொள்ள மாட்டார்கள். சத்தியமாயும், பஹிரங்கமாயும், சாதாரணமாயும் வேலைசெய்வார்கள்.

4. சத்தியப்பிரசாரர்கள் களங்கமற்ற ஹிருதயங்களையுடையவராக விருக்கவேண்டும். இவர்களின் வார்த்தைகள் தூய்மையானதாயும், தொனி கொடூரமாயும் வேகமாயுமிருக்க வேண்டியதவசியமாகும். பலாத்காரத்தால் எவரையும் கட்டாயப்படுத்துவது சத்தியப்பிரசாரர்களுக்கழகல்ல.

5. சத்தியப்பிரசாரம் பொருள் சேகரிப்பதற்குரிய தொழிலல்ல. சத்தியப்பிரசாரமென்ற பெயரைப் பூண்டு பெரும் உத்தியோகங்களைச் சம்பாதிக்க முடியாது. சத்தியப்பிரசாரத்தால் ஐஸ்வரியம் பெருகிவிடமாட்டாது. சத்தியப்பிரசாரத்திற்குக் கூலிகொடுக்க அல்லாஹுத ஆலாவைத் தவிர வேறு யாருமில்லை. சத்தியப்பிரசாரத்திற்குக் கூலியைப் பெறவேண்டுமானால், அல்லாஹுத ஆலாவின் சமூகத்திலேயே கேட்டுக்கொள்ள வேண்டும்.

6. சத்தியப்பிரசாரகர்களின் துணையாளர்களை அவர்களோடு சம்மந்தம் வைத்துக்கொள்ளக்கூடாதென்று கூறி நிர்ப்பந்திக்கப்படுமாயின், துணையாளர்கள் இதைப் பொருட்பண்ணக்கூடாது.

7. சத்தியப்பிரசாரகர்களிடத்தில் அல்லாஹுதஆலாவாலளிக்கப்பட்ட தங்கம், வெள்ளிக் குவியல்களுள்ள பொக்கிஷமிருக்கமாட்டாது. சத்தியப்பிரசாரர்கள் "மலக்கு"களல்ல. இவர்கள் ஜோதிடர்களுமல்ல. ஆருடமறிந்தவர்களுமல்ல. இவர்கள் சாதாரண பொதுமக்களாகவே யிருப்பார்கள். ஆயினும் இதே ஸ்திதியிலிருந்துகொண்டு அநேக அநியாயக்கார அரசர்களை அழிப்பதற்கு இறுதிக் கடிதங்களை யனுப்பிவிடுவார்கள்.

8. சத்தியப் பிரசாரர்கள் தங்களின் வேலையைச் செய்வதற்கு சந்தர்ப்பம் இடம் முதலியவைகளைத் தேடிக்கொண்டிருப்பது எப்பலனையுமளிக்கமாட்டாது. எதேச்சாதிகாரம் பெற்ற எதிரிகளை எச்சந்தர்ப்பத்தில் கண்டபோதிலும் சத்தியப் பிரசாரர்கள் உடனே தங்களின் வேலையை ஆரம்பித்துவிட வேண்டும். வசந்தகாலத்தை எதிர்பார்த்து நேரத்தை வியர்த்தமாக்காமல், எந்நிலைமையிலும் சதா வேலை செய்கிறவர்களாகவேயிருக்கவேண்டும். சத்தியப் பிரசாரர்களின் வேலையைக் காண்பவர்கள் நடுங்கவேண்டும். இவர்களின் சேவையைச் செவிகளாற் கேட்பவருங்கூட கஷ்டத்திற்குள்ளாகிவிட வேண்டும்.

9. சத்தியப் பிரசாரர்கள் அபஜெயமடைவதாயினுஞ்சரி, எதேச்சாதிகாரத்தில் எவ்வித மாறுதலுமேற்படாவிடினுஞ் சரி, சத்தியப் பிரசாரர்களின் ஊழியத்தில் வித்தியாச மேற்படக் கூடாது. அநியாயக்கார கோஷ்டியார் சத்தியப் பிரசாரர்களை நோக்கி, "நாங்கள் ஆயுதபலத்தால் ஜெயித்தோம். இதை ஆயுத பலத்தாலேயே நிலைநிறுத்துவோம்" என்று கூறுவார்களாயின், அவர்களுக்குச் சத்தியப் பிரசாரர்களளிக்கவேண்டிய விடை, "நீங்கள் அழிந்துபோவதும் ஜீவித்திருப்பதும் அல்லாஹுதஆலாவின் சம்மதத்தைப் பொருத்ததாக விருப்பதால் இதில் எங்களுக்கு எவ்வித சம்மந்தமுமில்லை" என்பதே.

10. சத்தியப் பிரசாரர்களின் வேலையைக் கண்டு சந்தேகப்படுவார்கள். இவர்கள் வெறும் வாக்குச் சமர்த்தர்களெனக் கூறுவார்கள். ஆயினும் சத்தியப் பிரசாரம் சம்மந்தமான வேலையில் தளர்ச்சி ஏற்படக் கூடாது. அன்றியும் தங்களுடைய லக்ஷியம் இன்னதுதான் என்பதைப் பஹிரங்கப்படுத்திவிட வேண்டும்.

11. எதேச்சாதிகாரத்தின் பீரங்கியையும் அசத்தியத்தின் வாளாயுதத்தையுங் கண்டு நடுங்கிப்போனவர்கள், உண்மையை மதித்துத் தங்கள் கடமையைச்செய்ய மாட்டார்களாயின் இவர்களை விட்டு

சத்தியப்பிரசாரர்கள் ஒதுங்கிக்கொள்ளவேண்டும். இப்பேடிகளைக் கண்டெடுத்தும் பார்க்கவுங்கூடாது. தைரியத்தை இழந்து விட்ட இப்பேடிகளைச் சத்தியப்பிரசாரர்கள் பஹிஷ்காரஞ்செய்யவேண்டும். இப்பேடிகள் அநியாயத்தைப் பூஜிப்பவர்களாகிவிட்டதால், இவர்களும் அநியாயக்காரர்களே. இவர்களை அல்லாஹுத ஆலாவின் முனிவாகிய வெள்ளம் அடித்துக்கொண்டுபோய்விடும். இவர்களைப் பற்றி சத்தியப்பிரசாரர்கள் வார்த்தையாடிக்கொண்டிராமல் தங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்காகச் சிந்திக்கவேண்டும். அவ்வெள்ளம் தங்களையு மடித்துக்கொண்டு போகாவண்ணங் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு கப்பலைத் தயாரிக்கவேண்டும்.

12. சத்தியப்பிரசாரர்கள் மும்மரமாய்க் கப்பல் கட்டுவதைக் கண்டு ஞானமில்லாதவர்கள் சிரிப்பார்கள். ஆயினும் சத்தியப்பிரசாரர்கள் தங்கள் வேலையை மட்டுமே கவனிக்கவேண்டும்.

13. சத்தியப்பிரசாரர்கள் தங்களை மட்டுமன்றி, அல்லாஹுத ஆலாவின் கோபத்திற் கிலக்காகாதவர்களையும் ஓர் அளவு காப்பாற்ற முயற்சிக்க வேண்டும்.

14. அநியாயக்காரர்களையும் துர்க்கிர்த்தியக் காரர்களையும் பஹிஷ்காரஞ் செய்யும்பொழுது சிநேகம், பாந்தவியம் முதலிய சம்பந்தங்களைப் பாராட்டக் கூடாது. பிரியமுள்ள நேசனாயினும், நெருங்கிய பந்துவாயினும், விசேஷ செல்வாக்குள்ளவனாயினும், பொருள் படைத்தவனாயினும், வித்தியாசமின்றி எக்கொடியவர்களையும் பஹிஷ்காரம் செய்தேயாகவேண்டும். நற்செய்கைகளிற் பற்றில்லாத துரோகிகள் அல்லாஹுத ஆலாவால் சிக்ஷிக்கப்படுவார்களாதலின், இவர்களையும் காபிர்களைப் போலவே பஹிஷ்காரஞ் செய்யவேண்டும். இவர்கள்மீது அனுதாபங் கொள்வது பெருங் குற்றமாம். இக்கொடுங் குற்றத்திற்காகப் பிராய சித்தம் (தௌபா) செய்யவேண்டும்.

15. எதேச்சாதிகாரம் படைத்தவர்களும் அநியாயத்தைத் தொழிலாக்கிக் கொண்டவர்களும் நல்வழியை அடையவே மாட்டார்கள். இவர்களின் செல்வாக்கு உலகில் வெகுகால மிருக்கமாட்டாது. அல்லாஹுத ஆலாவின் பிரஜைகளை ஒரு குறிப்பிட்ட காலம் வரை துன்பப்படுத்துவார்கள். இவர்கள் தங்களின் அடாத செய்கைகளை யொழித்து நன்னிலைமையை யடைய எத்துணை சந்தர்ப்பங்கள் அளிக்கப்படினும் இவைகளால் நன்மை எய்தமாட்டார்கள். முடிவில் கொடியவர்களெல்லோரு மழிந்து நாசமாகி விடுவார்கள். இவர்

களின் ஆட்சி வேரற்றுப்போகும். இவர்களின் செல்வாக்கு பறந்து போம். இவர்களின் நாமங்கூட அழிந்துபோம். உலகில் அல்லாஹுதஆலாவின் ஆட்சி ஏற்பட்டுவிடும். ஏற்கனவே கஷ்டத்தை அனுபவித்தவர்கள் சுகமடைவார்கள்.

16. எதேச்சாதிகாரம் ஒழிந்த பிறகு உத்தமர்கள் ஜெயமடைவார்கள். இவர்களின்மீது அல்லாஹுதஆலாவின் கிருபை வருஷிக்கும்.

17. அல்லாஹுதஆலாவிடத்தில் ஜெயத்தைக் கோருகிறவர்கள் முதன் முதலாக தங்களை நல்லவர்களாக்கிக் கொள்ளவேண்டும். நற்காரியங்களைச் சதா செய்கிறவர்களாயும், கெட்டகாரியங்களைச் செய்யாதவர்களாயு மிருக்கவேண்டும். தங்களால் நிகழ்ந்துவிட்ட தவறுகளை முன்னிட்டு (தௌபா) பிராயசித்தஞ் செய்யவேண்டும். சதா அல்லாஹுதஆலாவின் சமுகத்தில் கண்ணீர் சொரிந்தவர்களாயிருக்கவேண்டும்.

இவர்கள் முடிவில் ஜெயம் பெறுவார்களென்பது திண்ணம்.

முஸ்லிம்களின் உறுதி.

உலகத்தில் சதா அபஜெயங்களே ஜெயத்திற்குரிய அஸ்திவாரத்தைப் பலப்படுத்தியிருக்கின்றன. எதேச்சாதிகாரம், அநியாயம், நிர்ப்பந்தம் முதலியவைகள் எவ்வளவு அதிகரிக்கின்றனவோ அவ்வளவுக்கே உணர்ச்சிகளும் அதிகரிக்கும்.

சிங்கத்திற்கு அடிவிழுந்தாலும் காயமேற்பட்டாலும் தன் தைரியத்தை யிழந்துவிடுவதில்லை. ஆனால் அச்சிங்கத்திற்குப் பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்ற ஆவேசம் அதிகரிப்பது சகஜமே. சிங்கம் தனக்கு ஆரம்பத்திலேற்பட்ட அபஜெயத்தை முடிவில் தன் ஜெயத்திற்குப் பீடிகை யாக்கிக்கொள்ளும்.

வாயுவை சீசாவில் அடைத்து அமுத்த முயற்சிப்போமாயின், அது அமுந்தப்படுவதற்குப் பதிலாய் சீசா உடைந்து போவதைக் கண்கூடாகப் பார்க்கின்றோம். விருக்ஷத்தின் கிளைகளையெல்லா வெட்டித் துண்டு, துண்டாகச் செய்து விடுகிறோம். அவ்விருக்ஷம் சில தினங்கள்வரை விருக்ஷமென்ற நாமத்தையுமிழந்து நிற்கின்றது. ஆயினும் அவ்விருக்ஷத்திற்குரிய வசந்தகாலம் நெருங்கி விட்டதும் அவ்விருக்ஷம் தளிர்விட்டுப் பசுமையாகி, பூக்கவும் காய்க்கவும் தலைப்பட்டு விடுகின்றது.

சமுத்திரங்களை வசப்படுத்துவதற்கு எத்துணையோ முயற்சிகள் செய்யப் படுகின்றன. அவைகளின்மேல் கப்பல்கள் ஓட்டப் படுகின்றன. கப்பல்கள் சமுத்திரத்தைப் பிளந்துகொண்டு செல்லுகின்றன. கப்பல்களுக்கு ஆபத்து வராமல் தடுக்கும்பொருட்டு எத்துணையோ முன் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. ஆயினும் கப்பல்களுக்கு ஆபத்து வாராதென்று நிச்சயமாய்க் கூற எவராலுஞ் சாத்தியப்படுமா ?

சமூகம் முன்னேற்ற மடைவதும் தாழ்த்தப் படுவதும் ஆச்சரியமான காரியமல்ல. சமுத்திரத்தில் அலைகள் உயர்வதும் தாழ்வதும் சகஜமாயிருப்பதுபோலவே, சமூகங்கள் ஒரு காலத்தில் கீர்த்தியையிழப்பதும் மற்றொரு காலத்தில் புகழைப் பெறுவதும் சர்வசாதாரணமானவைகளே.

இப்பொழுது நாம் சந்தேகமின்றி மிகப் பெருங் கேவலமான நிலைமையை அடைந்திருக்கின்றோம். நம்மை வெகுதூரம் அநீதியின் புயல்காற்று ஒதுக்கித் தள்ளிவிட்டது. நம்முடைய புண்கள் அதிக ஆழமாகிவிட்டன. ஆயினும் இப்புண்கள் சௌகர்யமடையமாட்டாவென்று எவரும் கருத நியாயமேயில்லை. கஷ்டங்கள் நிகழ்வதும் நஷ்டங்களின் வெள்ளம் வருவதுமாகியவைகளையே உலகமென்றறிவிக்கபடுகின்றது. ஆதலின் உலகத்தில் அடுத்தடுத்துவரும் அலைகளை எதிர்க்கத் தைரியமுள்ளவர்களே உலகத்தில் ஜீவித்திருக்க முடியும். எத்துணை முயற்சிகள் பலிக்காவிடினும் முயற்சியை விடாது செய்து வரவேண்டும். ஒவ்வொரு அடியிலும் தடை ஏற்பட்டாலும் நடந்துகொண்டேயிருக்கவேண்டும். அடுத்தடுத்துக் கீழே விழுந்தாலும் ஒவ்வொரு தடவையும் எழுந்து நடக்கவேண்டும்.

"எஃகூப் பின்லைத்" என்பவர் ஒரு வியாபாரத்தை ஆரம்பித்தார். இதனால் தனக்குப் பெருங்கீர்த்தி ஏற்படும் என்று கூறினார். அப்பொழுது ஜனங்கள் அவரைப்பார்த்து சிரித்தனர். ஜனங்கள் சிரிப்பதைக் கண்டு "எஃகூப்பின்லைத்," "என்னிடத்தில் பணமில்லை. தங்கம், வெள்ளி கிடையா. எனக்கு உதவி புரிகிறவர்களுமில்லை. தேசத்தைக் கைப்பற்றுவது, அதை ஆளுவது முதலியவைகளில் எனக்குப் பரிக்ஷயமேயில்லை. ஆயினும் "குராஸான்" தேசத்து ஒருகாபிரை அபூமுஸ்லிமாகச் செய்து விட்ட ஹிருதயம் என்னிடத்தில் இல்லையா ?" என்று கூறினார்.

திம்ஷக் தேசத்திலிருந்து "பனீ உமைய்யா"வின் சிம்மாஸனத்தை, "பனீ அப்பாஸிய்யா" வுக்காகக் காலி செய்வதைப்

பொருத்து நடைபெற்ற கிளர்ச்சியின் தலைவர், "குராசான்" தேசத்து ஒருபுதிய முஸ்லிமாகிய அபூமுஸ்லிம் என்பவரே. ஆதலின் "எஃகூப்பின்லைத்" அதைச் சுட்டிக்காட்டியதன் கருத்து என்ன வென்றால்? ஒருமௌலா இஸ்லாம் பெருங் கீர்த்தி வாய்ந்த ஒரு அரசாங்கத்தை ஸ்தாபிக்க முடியுமாயின், தைரியமும் உறுதியுமுள்ள ஒவ்வொருவரும் எப்பெருங் காரியத்தையும்செய்து விடுவார்களென்பதில் தமக்கு சந்தேகமெதுவுங் கிடையாது என்பதே.

இவ்வரிய உறுதியும், உயரிய நோக்கமும், பெருந் தைரியமும், வீரமுமுள்ளவர்கள், தோற்றத்தில் கீர்த்தியற்றவர்களாயும் உலக ஆடம்பரங்கள் எதுவுமில்லாதவர்களாயு மிருந்தார்கள். ஆயினும் அவர்களுடைய வார்த்தைகள் ஹிருதயத்தி னுணர்ச்சியையும் "அல்லாஹு அக்பர்" என்னும் சப்தத்தை யொட்டியதாக வுமே யிருந்தன.

அல்லாஹுத ஆலாவின் வாக்குறுதியில் நம்பிக்கையுள்ள ஹிருதயங்களிலிருந்து வெளியாகும் உணர்ச்சி ஆச்சரியமாகவே யிருக்கும். முடிவில் உண்மையாகவே வெளித்தோற்றத்தில் கீர்த்தி எதுவுமில்லாத "எஃகூபின்லைத்" பர்ஷியா தேசத்தினரசராகிவிட்டார். அவரின் ஆட்சியை உலகத்திலுள்ள அரசாங்கங்கள் அசைக்க முடியவில்லை. பர்ஷியா தேசத்து சரித்திரம் "எஃகூபின்லைத்" அவர்களின் கம்பீரமான ஆட்சிப் பெருமையை இன்றும் கூறியவண்ணமாகவே யிருக்கின்றது.

1123-ம் ஹிஜ்ரத்தில் ஸ்பெயினில் ஒருமுறை இஸ்லாமிய அரசாங்கம் ஒழிந்துபோயிருந்தது. மஸ்ஜிதுகள் மதுபானம் உட்கொள்ளுமிடங்களாக்கப்பட்டிருந்தன. இஸ்லாமையும் இஸ்லாமின் நபியையும் இழிவுபடுத்தி, கூத்துமேடைகளில் வேடிக்கைகள் காட்டப்பட்டன. முஸ்லிம்களுக்குள்ள சுயேச்சை, சுயமதிப்பு, மரியாதை முதலியவைகளுள் எதுவுமில்லாமல் முஸ்லிம்கள் கேவலமாய் நடத்தப்பட்டனர். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில், ஈமானும் நற்செய்கைகளும் குடிகொண்ட ஒரு பக்கீர் (முஹம்மதிபுனு அப்துல்லா) கீழ் தேசத்தி லிருந்து புறப்பட்டு மேல் தேசமாகிய ஸ்பெயினுக்குச் சென்று தனித்தவராய் ஜனங்களுக் குபதேசஞ்செய்தார். குர்ஆனைப் பின்பற்றும்படியாயும், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் சுன்னத்துக்குப் புத்துயிரளிக்கும்படியாயும் ஜனங்களுக்கு அறிவுறுத்தினர். அவர் சத்தியப்பிரசாரஞ் செய்யுங்காலை அவரோடு அவரின் சிஷ்யரான, "அப்துல்முமின்" என்னும் ஒருவரே யிருந்தார். சத்தியப்பிரசாரம் புரிகிறவர்களுக்குதவியாய்ப்

பலிருக்க வேண்டியதவசியமில்லை. ஆதலின் முஹம்மதிபுனு அப்துல்லா அவர்கள் தனியாய்ச் செய்த முயற்சியால் சில வருஷங்களுக்குள் ஸ்பெயினில் மறுமுறை இஸ்லாமிய அரசாங்கம் ஏற்பட்டு விட்டது.

அல்லாஹுதஆலாவுக்கும் அவனுடைய ரசூலுக்கும் மூமின்களுக்குமே மரியாதை யுண்டென்னும் திருமறையில் நம்பிக்கை யுள்ளவர்களாயும், உண்மையான ஈமானுக் குரிய காரியங்களைச் செய்கிறவர்களாயும், நாமிழந்துவிட்ட இஸ்லாமிய கீர்த்தியைத் திரும்பவும் அடைவதற் குண்மையான வழியில் முயற்சி செய்கிறவர்களாயும் ஏற்பட்டு விடுவோமாயின், நமக்கு அல்லாஹுதஆலா அளவற்ற உதவியைப் புரிவானென்பது திண்ணம். ஆகவே சத்தியத்தையும் நீதியையும் அழித்துக் கொண்டிருக்கிற அகங்காரமுள்ள பிசாசுகளை நாம் சிக்ஷித்துவிடலாம்.

இஸ்லாமும் ஹபஷாவும்.

ஒரு காலத்தில் முஸ்லிம்கள் தேசங்களை ஆட்சி புரிவதற்காக ஜெனனமானார்களேயன்றி பிறரால் ஆளப்படுவதற்காக ஜெனனமாக வில்லை. ஒவ்வொரு முஸ்லிம்களும் வீரமுள்ள சிப்பாய்களாக விருந்தார்கள். அன்றியும், ஒவ்வொரு சிப்பாய்களும் அரசர்களாகவு மிருந்தனர். இவர்கள் சென்றவிடமெல்லாம் இவர்கட்கு ஆட்சிபுரியும் பாத்யதை அளிக்கப்பட்டன. உலகத்தின் எந்த பாகத்திலிருந்தாவது ஒரு முஸ்லிம் சிப்பாய் தனியே புறப்பட்டு பல அநியாயகரமான அரசாங்கங்களின் சிம்மாசனங்களைப் புரட்டி, சத்தியத்தின் உண்மையான ஆட்சியை ஏற்படுத்திவிடுவார்.

பயங்கரமான காடுகளிலும், மனிதர்கள் சஞ்சரிக்காத மலைகளிலும், புல் பூண்டில்லாத பாலைவனங்களிலும் முஸ்லிம் சிப்பாய்கள் துணையின்றித் தைரியமாய்ச் செல்லுவார்கள். ஆயினும் அவர்களுக்கு அல்லாஹுதஆலாவின் உதவி பக்கபலமாக விருந்தது. "குராசான்" தேசத்திலிருந்து "அபூமுஸ்லிம்" என்ற ஒருவர் தனியே புறப்பட்டு "பனூஉமைய்யா"வின் ஆட்சியை யொழித்து, "அப்பாஸி" ஆட்சியை ஸ்தாபித்து விட்டார். இராக் தேசத்திலிருந்து "அப்துர்ரஹ்மான்" என்பவர்கள் தன்னந் தனியாய்ப் புறப்பட்டு தங்களின் வாளாயுதத்தின் பலத்தால் பெரிய அரசாங்கத்தை ஸ்தாபித்து விட்டார்கள், அப்துல்லா என்பவரும், இன்னமொரு முஸ்லிமும்

தனித்தனியே மொராக்கோவிலும் எகிப்திலும், "தௌலத்தே பாத்திமியா" வென்னும் அரசாங்கத்தை ஸ்தாபித்துவிட்டார்கள். தைமூர், பாபர், நாதிர், அஹ்மத் ஆகியவர்கள் தங்களின் வாளாயுதத்தால் இந்தியாவினுடையவும், பர்ஷியாவினுடையவும் ஆட்சி சம்மந்தமான தீர்மானத்தைச் செய்துவிட்டார்கள். எத்தேசத்து முஸ்லிம்களின் சரித்திரத்தை யெடுத்துப் பார்த்தாலும், வீரமுள்ள முஸ்லிம்களை தேசங்கள் தானாகவே வரவேற்றன வென்பது விளங்கும். ஆயினுமிவைகள் இப்பொழுது பழங்கதைகளாயின.

ஒரு காலத்தில் அரசர்களை ஜெனித்த பூமி இக்காலத்தில் சிப்பாய்களைக்கூட ஜெனிக்காமலிருக்கிறது. இந்தியா, துர்க்கிஸ்தான், ஈரான், மிஸர், ஆப்பிரிக்கா, பார்பர் முதலிய தேசங்களில் அரசர்கள் மட்டுமே, ஜெனனமானார்கள். ஆயினும் இப்பொழுதோ ஜெயிக்கப்பட்டவர்களாயும்,இழிவான முறையில் ஆளப்படுகிறவர்களாயுமே ஜெனனமாகின்றார்கள். இழிவான இந்நிலைமையை நமக்கு முன் அனுபவிக்காத தேசமே கிடையாதென்று கூறலாம். இன்று நம்மை யாட்டிவைப்பவர்களின் கதி நாளை எவ்வாறாகு மென்பதை எவரும் மறந்துவிடலாகாது.

இஸ்லாம்.

மக்காவில் இஸ்லாம் உதயமாயிற்று. அப்பொழுது மக்காவில் குப்ரின் இருள் சூழ்ந்திருந்தது. முஸ்லிம்களுக்கு மக்காவின் முஷ்ரிக்குகள் கொடும் விரோதிகளாயிருந்தனர். முஷ்ரிக்குகள் செய்த அநியாயங்கள் சாமான்யமானவையன்று. சக்தியற்ற சிறு தொகையினர்களாகிய முஸ்லிம்களுக்கு மக்கமாநகரம் ஓர் நெருப்புக்குழிபோ விருந்தது. அப்பொழுது ஆதரவற்ற முஸ்லிம்கள் அனுபவித்த கஷ்டத்தை விவரிக்கமுடியுமா? அல்லாஹுத ஆலா ஒருவனென்னும் வார்த்தையை செவியில் வாங்க இஷ்டப்படாத முஷ்ரிக்குகள் முஸ்லிம்களின் ஜென்ம விரோதிகளாயிருந்தனர். அக்காலத்து முஸ்லிம்களுக்கு மக்கமா நகரம் ஜென்ம பூமியாக விருந்தும் இவர்கள் அந்நகரில் அமைதியோடு ஜீவித்திருக்க பாத்தியதையில்லாதவர் களைப்போல் நடத்தப்பட்டார்கள். முஸ்லிம்கள் மிக்க கேவலமான நிலைமையில் நடத்தப்பட்டதோடு, இவர்கள் மக்கமாநகரில் உயிர்வாழ்ந்திருக்க முடியாதவர்களாயு மிருந்தனர்.

ஹபஷா தேசம்.

ஆப்பிரிக்காவின் தெற்கே எமன் தேசத்திற் கெதிரில் செங்கடலோரமாய் (அபிசீனியா) ஹபஷா இருக்கின்றது. அரப்தேசத்திற்கும்

இதற்கும் நெருங்கிய சம்மந்தமுண்டு. ஹபஷா தேசத்துப் பாஷையும் எமன் தேசத்துப் பூர்வபாஷையும் ஒன்ருக விருக்கின்றன. ஹபஷா தேசம் எமன் தேசத்தை இருமுறை ஜெயித்திருக்கின்றது. ஹபஷா தேசம் ஹிஜாஸை ஜெயிப்பதற்காகவும் ஒருமுறை போர் புரிந்திருக்கின்றது. இதனுல் ஹபஷாவுக்குப் பலனென்று மேற்படவில்லை.

அரப்தேசத்தைச் சேர்ந்தார்ப்போல் இராக், ஷாம், மிஸர் ஆகிய தேசங்களிருந்தும், அவ்வெளிய முஸ்லிம்கள் அடைக்கலம் புகும் பாக்கியம் கரும்பூமி யென்னும் ஹபஷா தேசத்திற்கே கிடைத்தது. அத்தேசத்து அரசர் "நஜ்ஜாஷி" என்று அழைக்கப்பட்டார்.

முஸ்லிம்களின் இரு சிறிய வகுப்புகள், முஷ்ரிக்குகள் அறியா வண்ணம் மக்காவிலிருந்து புறப்பட்டு படகுகளிலேறி "ஹபஷா" தேசத்தை அடைந்தனர். சொல்லொணுக் கஷ்டத்திலிருந்து விடுபட்டு, ஹபஷா தேசத்தின் விருந்தினராய் வந்து கொண்டிருந்த முஸ்லிம்களை நஜ்ஜாஷி வெகு சந்தோஷத்தோடு வரவேற்ருர். முஸ்லிம்கள் கவலையற்று வாழ்வதற்கு வேண்டிய வசதிகள் அத்தேசத்தில் முஸ்லிம்களுக்குக் கிடைத்தன.

இச்செய்தி மக்காவின் முஷ்ரிக்களுக்குத் தெரிந்ததும் அளவு கடந்த ஆத்திரத்தை யடைந்தனர். பிறகு அத்தேசத்தின் உயர் குலத்தோரில் சிலர் நஜ்ஜாஷி அரசருக்கு விசேஷ வெகுமதிகளோடு ஒரு தூதுவக் கோஷ்டியைப்போல் ஹபஷா சென்று, அத்தேசத்தின் அரசரிடத்தில் இவர்கள் செய்துகொண்ட கோரிக்கையாவது:—"முஸ்லிம்களைத் தங்களிடத்தில் ஒப்புவித்து விடவேண்டும்" என்பதே. ஆயினும் அவ்வரசர் முஷ்ரிக்குகளின் வேண்டுகோளை அங்கீகரிக்கவில்லை.

தொடரும்.

உஸ்வயெஹஸனு.

கெடுதியைச் செய்ய வொட்டாமற் தடுக்குஞ் சக்தியை ஒரு பசும் பொன் விலங்கெனக் கூறலாம். இவ்விலங்கு சமூகம், நாகரீகம், அறிவு, சாஸ்திரம் ஆகியவைகளை யொட்டியதாக வேயிருக்கும். இவ்விலங்கு தளர்ந்து போகுமாயின், உலகசமாதானம் குலைந்துபோம். ஆனதுபற்றியே உலகம் பற்பல விலங்குகளை அமைத்திருக்கின்றது. சமூகம், குடும்பம் முதலியவைகள் பல சாங்கியங்களை அனுஷ்டித்து வருகின்றன. இவைகளுக்குக் கட்டுப்படாதவர்கள் பழிக்

கப்படுவார்கள். இவர்கள் நிச்சயமாகச் சில சந்தர்ப்பங்களில் சிக்ஷிக்கப் படவுங் கூடும்.

அமைதியின்மையைத் தடுப்பதற்காகவும், ஜனங்கள் ஒழுங்கான முறையில் முன்னேற்ற மடைவதற்காவும் அரசாங்கங்கள் பற்பல சட்டங்களை யியற்றுகின்றன. ஜனங்கள் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடந்து கொள்வதற்கு வேண்டிய நல்லறிவை யூட்டுவதற்காகக் கல்விவான்கள் தங்களின் சாமர்த்தியத்தால் பலதரப்பட்ட ஏற்பாடுகளைப் புரிகின்றனர்.

மனிதர்கள் தங்களிஷ்டம்போல் நடந்துகொள்ள முடியாமற் தடுக்குஞ் சக்திகள் தங்களிடம் மலிந்து கிடப்பதாய்க் கூறி மேனாட்டார் அந்நாட்டு நாகரீகத்தைப் பாராட்டிக் கொள்ளட்டும். உலகத்தின் சக்திகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டு கஷ்டப்படாமற் தடுப்பதற்காகப் பலவற்றை இயற்றி யிருப்பதாகக் கூறி ரோமாபுரியைச் சேர்ந்தவர்கள் தங்களைப் புகழ்ந்துகொள்ளட்டும். பலாசிபாவிலும் அறிவின் வளர்ச்சியிலும் தாங்களே முதன்மையானவர்களெனப் பகர்ந்து கிரேக்கர்கள் அகமகிழ்ந்து கொள்ளட்டும். ஆயினும் நாம் அன்னவர்களின் வார்த்தைகளால் ஏமாந்து போக வேண்டியதில்லை.

நாம் சடங்கு, பழக்க வழக்கங்கள் முதலியவைகளின் அடிமைகளல்ல வாதலின் மேல்நாட்டு சட்டதிட்டங்களை இச்சிக்க வேண்டியதில்லை. கொடிய சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படும் பேடித்தனம் நம்மிடங்கிடையாது. ஆதலின் ஒவ்வொரு விலங்குகளையும் மாட்டிக் கொள்ள நம்கரங்களை நீட்ட முடியாது.

மனிதர்களினறிவும், அபிப்பிராயங்களும் ஆத்மாக்களை வளர்க்கும் ஆகாரமல்லவாதலின், கிரேக்கர்களுடைய பலாசிபாவென்னும் வலையில் நாம் சிக்கிக்கொள்ள மாட்டோம். நம்முடைய நரம்பு, எலும்பு முதலியவைகள் சாஸ்திரத்தின் கயிற்றால் கட்டப்பட்டிருக்கின்றன. நம்முடைய இரத்தம் தசையின் மேல்தோலுக்குப் பதிலாய் சாஸ்திரத்தின் போர்வையால் போர்த்தப் பட்டிருக்கின்றது. அசைக்க முடியாத மதவுணர்ச்சி நம்முடைய ஹிருதயங்களை ஆட்சிபுரிகின்றது. ஆகவே, மனதைக் கவரத்தக்க சடங்கு சாங்கியங்கள், ஏமாற்றக் கூடிய சட்டதிட்டங்கள், ஆச்சரியத்தைத் தரும் பாலசிபாக்கள் ஆகிய ஒவ்வொன்றையும் ஒதுக்கித் தள்ளி விட்டு; சாஸ்திரத்தின் கயிற்றாற் கட்டி நம்மை இஸ்லாமிடத்தில் ஒப்புவித்து விடவேண்டும், இது ஒன்றே நமக்குக் கீர்த்தியை யளிக்கவல்லதாகும்.

கெடுதியை யகற்றுவதற்காகவுள்ள விலங்குகளுள், மத சம்மந்த மானதே பெருமைக் குரியதாகும். ஆனதுபற்றியே நாயகம் ஸல் லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை மட்டும் நாம் பின்பற்ற வேண்டு மென்று அல்லாஹுதஆலா நம்மீது கடமையாக்கி, உலகத்திலுள்ள அழிந்துபோகும் சக்திகளுக்கு நாம் அடிமையாகிவிடாமல் சுயேச்சை யளித்துவிட்டான். அல்லாஹுதஆலா, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை சாதாரணமாகப் பின்பற்றும்படி மட்டும் நமக்கு அறிவிக்கவில்லை. ஏனெனின் ஒருவரைப் பின்பற்றுவதால் மற்றவர்களைப் பின்பற்றக் கூடாதென்று ஏற்பட மாட்டாது. ஆத லின் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை மட்டுமே பின் பற்றுவது நம்மீது கடமையாக்கப் பட்டிருக்கின்றது. ஏனெனின் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களைத் தவிர்த்து, வேறெ ங்கும் நற்செய்கைகளின் பொக்கிஷத்தையடைய முடியாது. அல்லா ஹுதஆலா நமக்குச் செய்திருக்கும் எச்சரிக்கையைச் சிந்திக்கும் பொழுது, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களை நாம் பின் பற்ற வேண்டுமென்று நம்மீது கடமை யாக்கப்பட்டிருப்பது மல்லாமல் மற்ற பெரிய மனிதர்களைப் பின்பற்றக் கூடாதென்றும் அறிவுறுத் தப்பட்டிருப்பது புலப்படும்.

இருள் சூழ்ந்த உலகத்தின் ஒவ்வொரு இருளிலும் நமக்குப் பிர காசத்தை யளித்து நல்வழியைக் காட்டக்கூடியது அவ்வொரே சூரியன் (நாயகம் சல்லல்லாஹு அலைஹிவஸல்லம்வர்கள்) என்பதை நன்குணர வேண்டும். இச் சூரியனின் ஒளியை உண்மையில் பெற்றி ருக்கும் நக்ஷத்திரங்களையும் நாம் பின்பற்றவேண்டியதவசியமே.

"நல்ல காலம் என்னுடைய காலம்" என்றும், "இதற்குப் பிறகு வருகிறவர்களின் காலமும், அதற்குப் பிறகுவருகிறவர்களின் காலமும் நல்லகாலம்" என்றும் நாயகம் சல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். "என்னுடைய சஹாபாக்கள் நக்ஷத்திரங் களைப் போன்றவர்கள்" என்றும் நாயகம் சல்லல்லாஹு அலைஹிவ ஸல்லமவர்கள் கூறியிருக்கின்றார்கள். குர்ஆன் ஷரீபில் அல்லாஹுத ஆலா நாயகமவர்களோடு சஹாபாக்களையுஞ் சேர்த்துப் பல தடவை களிற் கூறியிருக்கின்றான்.

"(அல்லாஹுத ஆலா) உங்களை, உலகத்தாருக்கு நல்வழி காட் டுவதற்காக நியமித்திருப்பதால் மனிதர்களில் நீங்களே நல்லவர்கள். நீங்கள் நல்லதை ஏவிக் கெடுதிகளை யகற்றுவதோடு அல்லாஹுத ஆலாவின் பேரில் ஈமான் உள்ளவர்களாகவு மிருக்கின்றீர்கள்" என்

னும் திருமறையை முஸ்லிம்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

நல்லதை ஏவிக் கெடுதிகளை யகற்றும்படி குர்ஆன்ஷரீபில் பல இடங்களில் வற்புறுத்தப் பட்டிருக்கின்றன. இவைகளின் வியாக்கியானத்தை அறிய வேண்டுமாயின் ஹதீதுகளின் கிரந்தங்களையே புரட்டிப் பார்க்கவேண்டும். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களும் அவர்களின் சஹாபாக்களும் கெடுதியை யகற்றுவதற்காகச் செய்திருக்கும் ஒவ்வொரு காரியங்களையும் அக்கிரந்தத்திற் காணலாம்.

உஸ்வயேநபவீ

கெடுதியை யகற்றுகிறவர்கள் முதலாவதாகத் தன்னையும், பிறகு குடும்பத்தையும் அதற்குப் பின்னர் சமூகத்தையும் கெடுதிகளை விட்டுக் காப்பாற்றவேண்டும். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் இம்முறையின்படியே கெடுதிகளை யகற்றும் கடமையைச் செய்து வந்தார்கள்.

நாயகமவர்கள் சகல கீர்த்தியும், பெருமையும் வாய்ந்தவர்களாயிருந்துங்கூட அதிகமாய்த் தொழுவார்கள். இதனால் கால்கள் வீங்கி வெடித்துப் போவதுமுண்டு. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் இத்துணை கஷ்டத்துடன் தொழுவதை முன்னிட்டு, சஹாபாக்கள் நாயகமவர்களைப் பார்த்து, "யாரசூல்லல்லாஹ்! உங்களுடைய தவறுகளையெல்லாம் அல்லாஹுத ஆலா மன்னித்திருக்கும் ஸ்திதியில் தாங்கள் இவ்வளவு கஷ்டத்துடன் ஏன் தொழவேண்டும்?" என்று கேட்டதற்கு; "நான் அல்லாஹுத ஆலாவின் நன்றியை அறிந்த அடிமையாவதற்கு முயற்சிக்க வேண்டாமா?" என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் விடைபகர்ந்தார்கள்.

அல்லாஹுத ஆலாவின் ஞாபகத்தை விட்டு ஹிருதயத்தைத் திருப்பக்கூடிய காரியங்கள் சம்பவித்தாலும், அல்லது தங்களுக்குள் பெருமையை யுண்டுபண்ணக் கூடியவைகள் எதிர்ப்பட்டாலும் அவைகளைக் கடுமையான முறையில் விலக்கிவிடுவார்கள். உதாரணமாக:—

ஹஜ்ரத் ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் தங்களின் வீட்டில் ஒரு பர்தாவைத் தொங்கவிட்டிருந்தார்கள். அதில் ஏதோ சொரூப மிருந்தது. அத்திரையை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் கண்டதும், "எங்கள் முன்னிற்கும் திரையையகற்றி விடுங்கள். ஏனெனின் இதிலுள்ள சொரூபமானது சதா என்னு

டைய தொழுகையைக் கெடுக்கின்றது," என்று நாயகமவர்கள் எச்சரித்தார்கள்.

நாயகமவர்களுக்கு ஒரு ஸஹாபி நல்ல ஆடை ஒன்றை அளித்தார்கள். அதை யணிந்துகொண்டு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் தொழுதார்கள். ஆயினும் தொழுகை முடிந்தவுடனேயே மிகவும் வெருப்புற்று அதைக் களைந்தெறிந்துவிட்டு, "இது பேணுதலை யுடையவர்களுக்குத் தகுதியானதல்ல" என்று கூறினார்கள். ஜனங்களின் புகழ்ச்சியே எவருக்கும் பெருமையென்னும் வியாதியை யுண்டுபண்ணும். இவ்வியாதியே, அரசர்களையும் பணக்காரர்களையும் பீடித்து, மற்றெல்லாவைகளையும்விடத் தங்களை சிரேஷ்டமானவர்களென நினைத்துக்கொள்ளும்படி செய்துவிட்டது. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் சகல மனிதர்களைக் காட்டினும் கீர்த்தி வாய்ந்தவர்களா யிருந்தபோதிலும் மற்ற நபிமார்களைவிட தங்களை சிரேஷ்டமானவர்களெனக் கூறவேண்டாமென்று எச்சரிப்பார்கள்.

தொடரும்.

இஸ்லாமும் சங்கங்களும்.

மேல் நாட்டாரைப் பின்பற்றிச் சங்கங்களை ஏற்படுத்தவும் கான்பரன்சுகளை நடத்தவும் பலர் முற்பட்டுவிடுகின்றனர். அவைகளுக்குப் பற்பல பெரும் சட்டங்களை யியற்றுவதற்காக அனேகமைக்கூடுகளைக் காலிசெய்து விடுகின்றனர். முஸ்லிம்களை ஒன்று சேர்ப்பதற்கு இஸ்லாமிலிருந்து வரும் சக்திக்குப் புத்துயிரளிக்கவேண்டுமென்பதை எவரும் சிந்திப்பதில்லை. நாம் முஸ்லிம்களாயின் ஒவ்வொருநாளும் ஐம்முறை பள்ளிவாசலில் சேகரமாகக் கடமைப்பட்டிருக்கிறோம். சகல காரியங்களையும் நடத்த வேண்டிய இடம் ஏற்கனவே நமக்குப் பள்ளிவாசலாகவே யிருந்தது. பள்ளிவாசலின் முற்றமே நம்முடைய பார்லிமென்ட் ஹௌசாக விருந்தது. பள்ளிவாசலின் மிஃராபுக்குக் கீழேயே நம்முடைய கான்பரன்சுகள் நடைபெற்றன. மேல் நாடுகளில் வருஷம் ஒருமுறை அல்லது இருமுறைகளே கான்பரன்சுகள் நடைபெறும். ஆயினும் நம்முடைய கான்பரன்சுகள் பிரதி வெள்ளிக்கிழமைதோறும் நடைபெற்றன. மற்றவர்கள் (முஸ்லிம்மல்லாதவர்கள்) கான்பரன்சைக் கூட்டவேண்டிய அவசியமிருக்கலாம். சங்கங்களுக்கு உத்தியோகஸ்தர்களைத் தேட

வேண்டியதும் ஆச்சரியமல்ல. ஆயினும் நமக்கு இப்படிப்பட்ட அவசியம் எதுவுமில்லை. ஏனெனில் ஒவ்வொருநாளும் நம்முடைய ஒவ்வொரு பள்ளிவாசல்களும் ஐந்துதடவை மிகப் பெரும் சங்கங்களாகவே யிருக்கின்றன. மஸ்ஜிதுகளின் இமாமுகளே இம்முஸ்லிம் சங்கங்களுக்குக் காரியதரிசிகளாகும். நம்முடைய இப்பழைய சங்கங்களைச் சீர்திருத்துவதைவிட்டுப் புதிய சங்கங்களை ஸ்தாபிக்கக் கவலைப் படுவதேனோ? இன்று சங்கங்களாலும், சட்டப்படி அமைக்கப்பெற்ற புதிய கூட்டங்களாலும் நமக்கு எப்பலனும் ஏற்படப்போவதில்லை. நம்முடைய பூர்வசங்கங்களுக்குப் புத்துயிரளித்தோமானால் ஒவ்வொரு முஸ்லிமும் ஒரு சங்கத்தைப் போலிருக்கக்கூடும். முஸ்லிம்களின் ஒவ்வொரு வார்த்தைகளும் மதிக்கப்படும். ஹிஜாஸின் பூமியில் உதயமான இஸ்லாமை, சைனு, ஜாவா, சுமட்ரா, இந்தியா முதலிய தேசங்களில் பரத்துவதற்கேதாவதொரு சங்கம் வேலை செய்ததா? அச்சங்கத்திற்குப் பிரசிடெண்டும் சிக்ரெட்டெரிகளுமிருந்தார்களா?

அரபு தேசத்தின் ஒரு வியாபாரி வியாபாரம் புரிவதற்காக சுமட்ராசெல்லுவாராயின், ஒரு மிஷன் செய்யும் வேலையை அவர்தனியே செய்து விடவில்லையா?

நாம் நம்முடைய வேலைகளை ஒழுங்கான முறையில் சதா செய்ய வேண்டியதவசியமாகும். நாம் வியாபாரிகளாயின் வியாபாரத்தைச் செய்வோம். உபாத்தியாயர்களாயின் பாடங்களைக் கற்பிப்போம். ஆயினும் ஐந்துநேரமும் பள்ளிவாசலுக்குச் சென்றோமாயின் நம்முடைய சங்கம் கூடிவிடும். மனிதர்களால் தயாரிக்கப்படும் உயர்தரமான பிரசங்கங்களுக்குப் பதிலாய், அல்லாஹுதஆலா நமக்குள் வைத்திருக்கும் நெருப்பிலிருந்து கிளம்பும் பொறிகள் மற்றவர்களின் ஹிருதயத்தில் பெருத்த உணர்ச்சியையுண்டுபண்ணிவிடும்.

நாம் சதா நம்முடைய வேலைகளின் செலவுக்காகப் பொருள் சேகரிக்க யோசிக்கின்றோம். இதற்காக வேண்டிய பண்டுகளைப்பற்றி விளம்பரஞ் செய்கின்றோம்: இதுவும் முஸ்லிம் மல்லாதவர்களைப் பின் பற்றிய காரியமாகவே தெரிகிறது. பூர்வத்திலிருந்தே ஜகாத்தென்னும் கடமை ஒன்று நம்மிடமிருக்கின்றது. அதற்குப்புத்துயிருண்டாகும் படி முயற்சிப்போமானால் கோடிக் கணக்கான ரூபாய்களின் "ஓர் பைத்துல்மால்" எச்சந்தர்ப்பத்திலும் நம்மிடத்தில் தயாராகவிருக்கும்.

இஸ்லாமும் இந்திய அரசாங்கமும்.

சில காலத்திற்கு முன் இந்தியாவின் கண் இஸ்லாம்மத அரசாங்கம் நிலவியிருந்தது. கெடுதிகளை யகற்றுவதற்கு வேண்டிய சாதனங்கள் ஓரளவு மலிந்து கிடந்தன. அப்பொழுது சாஸ்திரத்திற்குக் கட்டுப்பட்டு நடந்து கொள்ளவேண்டியது கடமையாக விருந்தது. அரசாங்கத்தின் மதம் இஸ்லாமாக விருந்ததால் இஸ்லாமிய சட்டப்படி தீர்ப்புகள் செய்யப்பட்டன. இஸ்லாமிய சட்டதிட்டங்களில் பேரிய ஆராய்ச்சியுள்ள நீதிபதிகளால் செய்யப்பட்ட தீர்மானத்தையே அமுலுக்குக்கொண்டுவர முடியும். இத்தகைய தீர்ப்புகளைத் தவிர மற்ற தீர்மானங்கள் உபயோக மற்றனவென்றும் இவைகளுக்கு முஸ்லிம்கள் கட்டுப்படவேண்டிய தவசியமில்லையென்றுங் கருதப்பட்டன. இவ்வரிய நோக்கம் அறிவு முதலியவைகளை ஏதேச்சாதிகாரத்தின் செல் வாக்கு முஸ்லிம்களின் ஹிருதயங்களிலிருந்து போக்கி விட்டது.

ஆகவே இக்காலத்தில் உண்மையான முஸ்லிம்களைப் பார்ப்பது சிரமமாயிருக்கின்றது.

ஷாஹ்ஆலம் பாஷா அவர்கள் பெங்கால், பீஹார், ஓரிஸ்ஸா முதலிய தேசங்களை ஆங்கிலேயரிடம் ஒப்புவித்தபோது ஏற்பட்ட நிபந்தனைகளுள், " ஆங்கிலேயர்கள் இத்தேசங்களை இஸ்லாம்மத சட்டதிட்டத்தின்படி ஆட்சிபுரிய வேண்டியது. இதில் எவ்வித வித்தியாசமும் மாறுதலும் செய்யப்படமாட்டா" என்னும் ஒரு நிபந்தனையுமுண்டு.

மீர்ஜஃபர், இந்தியாவின் கீழ்பாகத்தையும், முஹம்மது அலி கான் ஆர்க்காடு, கர்நாடகம் ஆகியவைகளையும், ஆசிபுத்தௌலா அலஹாபாத், ரோஹில்கண்டு ஆகியவைகளையும், இன்னுஞ் சிலர் ஆக்ரா முதலியவைகளையும் விட்டு நீங்கின பொழுது அத்தேசங்களில் இஸ்லாமிய சட்டப்படி ஆட்சிபுரிவதாக ஆங்கிலேயர் கையெழுத்துச் செய்து ஒப்புக்கொண்டிருப்பதாய்ப் பிரஸ்தாபிக்கப்படுகின்றது. இப்படிப்பட்ட ரிக்கார்டுகள் லண்டனிலுள்ள இந்தியா ஆபீசிலும், இந்தியாவிலுள்ள கவர்ண்மெண்டு ஹௌசிலும் இருக்கலாம்.

1857-ம் வருஷத்திற்குப் பிறகு ஆனரபில் ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரின் ஆட்சி யொழிந்து இந்தியாவின் சக்ரவர்த்தியாகிய ஆங்கில அரசர் தேசத்தை யொப்புக்கொண்டார். ஆயினும் இஸ்லாமிய சட்டதிட்டங்களின்படி ஆட்சிபுரிவதென்ற நிபந்தனைகளின் கதியைப் பற்றி விவரித்துக் கூறவும் வேண்டுமா ?—

சில வருஷங்களுக்குமுன் லார்ட் கர்ஸனின் கவர்ண்மெண்டு, நிஜாம் அரசாங்கத்திற்கு மந்திரியாகிய கிருஷ்ணபுருஷாத் அவர்களின் மூலமாயும், ரெஜிடெண்டின் தந்திரமான நிர்ப்பந்தத்தாலும், அப்பொழுதிருந்த நிஜாம் (ஹிஸ் ஹைனஸ் நவாப் மீர்மஃபூப் அலிகான் மர்ஹூம்) அவர்களின் கவர்ண்மெண்டில் பிரார் மாகாணத்தை 99 வருஷத்திற்குக் குத்தகையாக வாங்கிக்கொண்டது. அக்குத்தகைச் சீட்டை இன்றைக்கும் வாங்கிப் பார்க்கலாம். அதில் இஸ்லாமிய சட்டதிட்டங்களைப் பற்றிய நிபந்தனைகள் ஏதுமில்லையா? பிரஸ்தாபக் குத்தகைச் சீட்டில் "பிரார்" ஆட்சியைப் பொறுத்து இஸ்லாம் சம்மந்தமான சில நிபந்தனைகள் இருந்தாலுங்கூட பலமுள்ள அரசாங்கம் அந்நிபந்தனைகளை மதிக்க முடியுமா?

ஹிந்துமுஸ்லிம் ஒற்றுமை.

சென்ற செப்டம்பர் மாதம் டில்லியில் நடைபெற்ற இந்து முஸ்லிம் ஒற்றுமை மகாநாட்டிலும், இது போன்ற ஏனைய மகாநாடுகளிலும் இந்து முஸ்லிம்களுக்குள் உண்மையான ஒற்றுமையையுண்டுபண்ணுவதற்கவசியமான காரியங்களைக் கவனிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. முஸ்லிம்கள் ஜெயித்தவர்களென்றும் இந்துக்கள் ஜெயிக்கப்பட்டவர்களென்றும் சகல வழியாலும் ஓயாது ஞாபக மூட்டப்படுகின்றது. ஜெயித்தவர்கள் யார்? ஜெயிக்கப் பட்டவர்கள் யார்? என்பனவற்றை மறந்து, 1857ம் ஆண்டுக்குப் பின்னர் இந்துக்களும் முஸ்லிம்களும் ஜெயிக்கப்பட்டவர்கள் தானென்ற ஒரே உணர்ச்சியோடு கட்டுப்பாடாய் வேலைசெய்வதற்கு ஏற்பாடு செய்யாதவரை இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஒற்றுமையை யுண்டுபண்ண முடியாது.

சரித்திரங்களைக் கவனிப்போமாயின், ஒவ்வொரு சமூகங்களிலும் நல்லவர்களுங் கெட்டவர்களும் இருந்ததாகவே புலப்படுகின்றது. இந்தியாவில் முஸ்லிம்களின் ஆட்சியைப் பற்றியுள்ள சரித்திரமும் அவ்விதமே. ஆயினும் முஸ்லிம் அரசாங்கத்தில் நிகழ்ந்திருக்கும் சில கெடுதிகளை வெகு சிரமத்துடன் தேடி எடுத்து, சிலவற்றைக் கற்பனையுஞ் செய்து இவ்விரண்டையும் சந்தர்ப்பத்திற் கேற்றவாறு இணைத்து, சங்கங்கள், கல்விச்சாலைகள், புஸ்தகங்கள், பத்திரிகைகள், சம்பாஷணைகள், விளையாட்டுகள், கூத்து மேடை முதலியவைகளில் ஓயாது எழுதியும், கூறியும், போதித்தும், நடித்தும் செய்யப்படுகின்ற

பிரசாரத்தின் பயனாக ஒற்றுமைக்கேடும், விரோதபான்மையும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகுமல்லவா?

இந்துத் தலைவர்கள் தங்களின் சமூகத்தாருக்கு உணர்ச்சியை யுண்டுபண்ணுவதற்காக முஸ்லிம்களை பெரிய அநியாயக்காரர்களென ஜனங்களுக்குப் போதிக்கவேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டனர். மதசம்மந்தமாய் முஸ்லிம்களின்மீது அருவருப்பையுண்டு பண்ணுவதற்காக வேலைசெய்தவர்களுள் சுவாமி தியானந்தஜீயையும், ராஜீய துறையில் முஸ்லிம்களின் மீது கோபத்தை மூட்டுவதற்குரிய ஊழியம் புரிந்தவர்களுள் திலக் மகாராஜரையும் முதன்மையானவர்களெனக் கூறலாம். முஸ்லிம்களுக்கு விரோதமாய் இந்துக்கள் போர் புரியவேணுமாய் "சுவாமிதியானந்தஜி" பலமுகாந்தரங்களைக் கூறியிருக்கின்றார். பெரிய பட்டினம் முதல் சிறுகுக்கிராமம் வரையில் ஆரிய சமாஜிகள் செய்யும் வேலைகள் இந்து முஸ்லிம்களுக்குள் இயற்கையாக விருந்துவரும் ஒற்றுமையைக் கூட கெடுத்துவிடுகின்றன. ஆரியசமாஜ பத்திரிகைகளை வாசித்தோமானால் இந்து முஸ்லிம் ஒற்றுமையைக் கெடுக்கவேண்டியதே அதன் நோக்கமெனப் புலப்படும். இஸ்லாமையும் முஸ்லிம்களையும் நிந்தித்து இஸ்லாமிய அரசர்கள் அநியாயஞ் செய்ததாய் இட்டுக் கட்டியகதைகளைக் கூறி, முஸ்லிம்களுக்கு விரோதமாய் இந்துக்களைக் கிளப்பி விடுவதே ஆரியபிரசாரர்களின் வன்மையாக விருக்கின்றது. ஆரிய சமாஜிகளால் இயற்றப் பெற்றிருக்கும் நூல்களின் விசேஷமும் இதுவே.

பரோடா சமஸ்தானத்தின் ஒரு பெரிய கல்விவானால்மகாராஷ்டிர பாஷையில் எழுதப்பட்ட "இஸ்லாமிய அரசாங்கம்" என்ற புஸ்தகத்திற்குப் பலர் மறுப்பெழுதியிருக்கின்றார்கள். அன்றியும் பம்பாய் "இன்டிபென்டன்ட்" காலேஜ் புரோபஸர் ஷேக்அப்துல் காதர் M. A. அவர்களும் மறுப்பெழுதுவதாக வாக்குச் செய்து வரைந்திருப்பதாவது :—

"இஸ்லாமிய அரசாங்கம் என்னும் நாமத்தால் மராட்டியபாஷையில் எழுதப் பெற்றிருக்கும் புத்தகத்தில் ஒரு நாவலை ஆதாரமாகக் காட்டி, சிவாஜியைப் புகழ்ந்தும் ஆலம் கீரை (ஔரங்சீபை) இகழ்ந்தும், கதையைக் கற்பனை செய்தும் எழுதப்பட்டிருக்கின்றது. இப் புஸ்தகங்கள் பள்ளிக்கூடங்களில் மாணவர்கட்கு கற்பிக்கப்பட்டு வரும் நிலைமையில் இந்து முஸ்லிம்களின் ஒற்றுமையைப் பூர்த்தி செய்ய முடியுமா?". என்பதே

பொதுவாக இந்துக்களுடையவும், குறிப்பாக மகாராஷ்டிர வீரர்களுடையவும் மரித்துக்கிடந்த உணர்ச்சியைக் கிளப்பி விடுவதற்காக திலக் மகாராஜ் மண்ணில் புதைந்து மடித்துப்போன, சிவாஜி, ஆலம்கீர் இவர்களுடைய எலும்புகளைத் தோண்ட ஆரம்பித்தார் சிவாஜியை உத்தம வீரென்று காட்டி, இதற்கு எதிரிடையாய் ஆலம்கீர் சகல அநியாயங்களுக்கும் எண்ணிறந்த துர்க்கிர்த்தியங்களுக்கும், காரணஸ்தர் என்று வெளியிட்டார்.

இதற்காகக் கற்பனை செய்த பொய்க் கதைகளைத் தயாரித்து, இஷ்டம்போல் சரித்திரங்கள் இயற்றப்பட்டன. நிகழ்ந்திராத சம்பவங்களெல்லாம் நிகழ்ந்ததாய்க் காட்டி பிரசாரஞ் செய்வதற்காகப் பலஸ்தாபனங்களேற்பட்டன. அபாண்டமான பொய்க்கதைகளும், டிராமாக்களும், நாவல்களும் எழுதப்பட்டன. இவைகளைத் தேசத்தில் பரத்துவதற்காக விளம்பரசபைகளும் ஸ்தாபிக்கப்பட்டன.

இட்டுக் கட்டிய பொய் சம்பவங்கள் கூத்து மேடைகளிலும், கண் காக்ஷி சாலைகளிலும் நடித்துக் காண்பிக்கப்பட்டன. தேசத்தில் பெரும் விபரீதத்தை யுண்டுபண்ணக்கூடிய பொய்யான சரிதைகளும் நாவல்களும் மகாராஷ்டிரபாஷையில் ஆரம்பமான போதிலும் வெகு சீக்கிரத்தில் இவைகள் குஜராத் பாஷையிலும் வங்காள பாஷையிலும் பரவிவிட்டன. நஞ்சூட்டிய இவ்வேற்பாடு எல்லா இந்திய வாலிபர் மூளைகளிலும் விஷத்தை யுண்டுபண்ணிவிட்டது. ஒற்றுமையை வேரோடு கெல்லத்தக்க காரியங்கள் மிகவுங் கட்டுப்பாடான முறையில் இன்றளவும் நடந்து வருகின்றன.

ஓர் இலங்கை நிருபம்.

ஜனாப், "அல்கலாம்" ஆசிரியர் அவர்கட்கு, அஸ்ஸலாமு அலைக்கும்.

கருணைகூர்ந்து இத்துடன் வரும் " தாருல் இஸ்லாம் பத்திராதிபரும், காபூலில் கல்லெறிந்து கொல்லப்பட்ட காதியானியும்" என்ற வியாசத்தை தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

தாருல் இஸ்லாம் பத்திராதிபரும், காபூலில் கல்லெறிந்து கொல்லப்பட்ட காதியானியும்.

சென்ற நவம்பர்மாதம் வெளிவந்துள்ள "தாருல் இஸ்லாம்" சஞ்சிகையில், அதன் ஆசிரியரான கனம். பா. தாவுத்ஷா சாஹிப் B. A.

அவர்கள் நிஃமத்துல்லாகான் என்னும் ஓர் அஹ்மதியரை (காதியானியை) காபூலில் கொன்றதைப்பற்றி முழு இஸ்லாமிய உலகத்தின் அபிப்பிராயத்திற்கும் முரணாக சில விஷயங்களை வரைந்திருக்கிறார். இதில் உண்மைக்கு மாற்றமான அநேக விஷயங்கள் காணப்படுவதினால், அவ்வுண்மைகளை வெளிபபடுத்தும் வண்ணம் சில நேயர்கள் எம்மை வேண்டிக் கொண்டதின் நிமித்தம் இச்சிறு கடிதத்தை எழுதலானேன்.

"இஸ்லாத்திலிருக்க ஒருவருக்கு விருப்பம் இல்லையென்றே வைத்துக் கொள்வோம். அவர் தம்முடைய மனமார வேறொரு மதத்தில் சேர்ந்து கொள்ளுவாராயின் அவரைக் கொன்றுவிட வேண்டுமென்று குர் ஆனேனும் நபிபெருமானேனும் அனுமதியளிக்கவில்லை," என்று ஜனுப் தாவுத்ஷாசாஹிப்வரைந்துள்ளார். "நாயகவாக்கியம்" என்ற மகுடத்தின் கீழ் "தாருல் இஸ்லாமில்" நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய திருமொழிகளை வெளியிட்டுவருவதைக் கண்ணுற்ற யான், ஹதீதில் ஜனுப். தாவுத்ஷாஸாகிப் பாண்டித்திய முடையவரெனக் கருதலானேன். என்றாலும் மேல்வரைந்துள்ள ஜனுப் அவர்களின் சொற்களானது அன்னாரைப்பற்றி யான் முன் கொண்டிருந்த எண்ணத்தை மாற்றும்படி செய்துவிட்டது. இதற்குக் காரணம் பின்வரும் ஸஹீஹுல் புகாரியின் ஹதீதுகளே.—

1. இக்ரிமா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் திருவாய் மலர்ந்தருளியிருப்பதாவது:—" அலிரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் சில வழி கேடர் (ஸிந்தீக்) களைக் கொண்டுவரப்பட்டது. அந்தக்ஷணமே அவ்வழி கேடர்களை அலிரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நெருப்பிலிட்டு எரித்து விட்டார்கள்". இவ்விஷயம் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குத் தெரிந்தபோது, அவர்கள், "நான் அவ்வேளையிலிருந்திருப்பேனாகில் அவர்களை நெருப்பிலிட்டு எரித்திருக்கமாட்டேன். ஏனென்றால் ஆண்டவனால் செய்யக் கூடிய ஆக்கினையைக் கொண்டே (அதாவது நெருப்பால்) ஆக்கினை செய்ய வேண்டாமென்று நபிகள் பிரான் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் கூறியிருக்கின்றார்கள். ஆதலின் (அவர்களை நெருப்பைக் கொண்டு) ஆக்கினை செய்யாமல் கொன்றுவிடுவேன். ஏனெனில் எவனொருவன் தன் மார்க்கத்தை விட்டுவிடுவானோ அவனைக் கொன்று விடுங்கள் என்று எங்கள் நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவாய்மொழிந்திருக்கின்றார்கள்" என்று கூறினார்கள்.

2. அலிரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது :— “இறுதிக்காலத்தில் சில பாமரர்கள் வெளித் தோன்றி நல்லோர்களைப்போல் பேசுவார்கள். எனினும் அவர்களின் ஈமான் (உறுதி) அவர்கள் கழுத்துக்குங் கீழ் செல்லாது. எவ்விதம் ஒரு அம்பு வில்லை விட்டு துரிதமாய்ப் பாய்ந்து விடுகிறதோ, அதேபோல் மார்க்கம் (தீன்) அவர்களை விட்டுப் பிரிந்துவிடும். இவ்வாறானவர்களை எங்கெங்கு காண்பீர்களோ அந்தக்ஷணமே அவர்களைக் கொன்று விடுங்கள். (ஏனெனில்) நியாயத்தீர்ப்பு நாளில் இவர்களைக் கொன்றவர்களுக்குப் பெருந்தவாபாயிருக்கிறது” என றசூல் சல்லல்லாஹு அலைஹி வசல்லமவர்கள் கூறியிருக்கிறார்கள் என்பதே.

(இவ்விரண்டின் முதலாவது நாயகவாக்கியம் சஹீஹுல்புகாரி “கிதாபுத்திப்தாயத்தில் முஆனிதீன் வல் முர்த்ததீன் வகிதாலிஹிம்” என்னும் அத்தியாயம், ஹுக்மில் முர்த்தத்தி வல்முர்த்தத்கதி என்ற பாடத்திலும் 2 - வது வாக்கியம் கிதாபில்கவாரிஜி என்ற பாடத்திலும் வருகின்றன.) மேற்காட்டிய இருவாக்யங்கள் “இஸ்லாம் மார்க்கத்தை விட்டுவிடுகிறவர்களைக் கொன்றுவிடுவதற்குத் தக்க வேதசாட்சிபாகவிருக்கின்றன. ஆனால் மிர்ஸாஸாஹிப் காதியானி தனக்கு வருகிற வஹிக்கு மாற்றமான ஹதீதுகளை பயனற்றதெனத் தள்ளி விடுவேன் என்று ஆஜாசே அஹ்மதி 30-31 பக்கங்களில் கூறியும், குர் ஆனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த முகம்மது அலி M. A., L. L. B. அவர்கள் மிர்சாகுலாம் அஹ்மது காதியானியின் உண்மை சிஷ்யரானதால் அவரின் மொழி பெயர்ப்பில் அனேக ஸஹீஹான ஹதீதுகளைத் தள்ளிவிட்டு மிர்ஸாஸாகிப்புக்கு உதவியாக வரைந்தும் இருப்பதுபோல் ஜனுப்தாவுதுஷாஸாஹிப் மேற்குறித்த நாயகவாக்கியங்களை மறைத்து விட்டார். மிர்ஸாஸாகி பின்சிஷ்யரான முகம்மது அலியைப் பின்பற்றிய பா. தாவுத்ஷாஸாஹிப் எவ்வாறு குருதுரோகத்திற்காளாவார் ? இது நிற்க. ஒருவரைக் கல்லாலெறிந்து கொல்வது மானுஷீகத் தன்மைக்கு மாற்றமாயிருக்குமாயின் எமது சன்மார்க்கத்தில், விபசாரஞ் செய்த ஆண்பெண்களைக் கல்லாலெறிந்து கொல்லும்படி கட்டளையிடப்பட்டிருக்கின்றது. இங்ஙனமிருப்பதினால் இஸ்லாம் மார்க்கமும் மானுஷீகத் தன்மைக்கு மாற்றமாயிருக்குமென்று கூறுவர் போலும். ஒருகால் நம் இஸ்லாம் மார்க்கத்தில் அவ்வாறு கிடையாதென்று கூறினுங் கூறுவர். அவ்வண்ணங் கூறுவாராயின் ஸஹிஹுல் புகாரி கிதாபுல் முஹாரி பீன்மின் அஹ்லில் குப்ரி வர்ரித்தத்தி என்ற அத்தியாயத்தைப் பார்த்துக்கோள்ளுவாராக.

"மேலும் காபிரைக் கொன்று தான் விட வேண்டுமென்று கூறுவார்களாயின், இத்தகைய அதிகாரமானது ஏன் மற்றையமதத்தினருக்கும் இருப்பது கூடாது?" என்று தாவுத்ஷாசாஹிப் வினவுகின்றார். மற்றைய வேதங்களிலும் காபிரைக்கொன்றுவிடுவதற் கனுமதியிருப்பதை இவர் அறியவில்லை போலும். கிறிஸ்தவர்களுடையவும் யூதர்களுடையவும் பைபிள்களைத்திறந்து உபாகமம் 13வது அதிகாரம் 6வது வசனத்திலிருந்து 10வது வசனம் வரை வாசிப்பாராயின், பின் வரும் விதங் கண்டுகொள்வீர்:—

"உன் தாய்க்குப் பிறந்த சகோதரனாகிலும், உன்குமாரனாகிலும் குமாரத்தியாகிலும் உன் மார்பிலுள்ள மனைவியாகிலும், உன் பிராணனைப் போலிருக்கிற உன் சிநேகிதனாகிலும் உன்னை நோக்கி, "நாம், வேறு தேவர்களைச் சேவிப்போம் வாருங்களென்று" சொல்லி உன்னைச் சுற்றிலும், உனக்கு சமீபத்திலும், உனக்கு தூரத்திலாகிலும், தேசத்தின் எந்த பாகத்திலாகிலும் இருக்கிற ஜனங்களுடைய தேவர்களில்,நீயும் உன்பிதாக்களுமறியாத அன்னியதேவர்களைச் சேவிக்கும்படி இரகசியமாய் உன்னை ஏவிவிட்டால், நீ அவனுக்குச் சம்மதியாமல் அவனுக்குச் செவி கொடாமலும், உன் கண் அவன்மேல் இரக்கங் கொள்ளாமலும், அவனைத் தப்பவிடாமலும், அவனை ஒளித்து வைக்காமலும், அவனைக் கொலைசெய்யவேண்டும். அவனை கொலைசெய்வதற்கு முதலாவதாக உன் கைகளும் பின்பே சகல ஜனங்களின் கைகளும் அவன்மேல் இருக்கக்கடவது. அடிமைத்தன வீடாகிய எகிப்து (மிஸ்று) தேசத்திலிருந்து உன்னைப் புறப்படச்செய்த உன் தேவனாகிய கர்த்தரைவிட்டு விலகும்படி அவன் உன்னை ஏவினபடியால், அவன் சாகும்படி அவன்மேல் கல்லெறியக் கடவாய்."

மேலும் இந்துக்களுடைய வேத புத்தகங்களிலும் வேதங்களை விட்டு விடுகிறவனைக் கொன்று விடும்படி ஏவப்பட்டிருக்கின்றது. மனுஸ்மிருதி 8-வது பிரிவு 350—351-வது சுலோகங்களைக் கவனிக்க. (அஹ்லே ஹதீத் 21-வது மலர் 52-வது இதழ் 6-வது பக்கம்). இவ்வாதாரங்கள் போதாது போனால், ஜனாப் தாவுத்ஷா சாஹிபின் குருவாகிய மௌல்வி முஹம்மதுஅலி சாஹிப் அவர்களின் சென்ற சபர்மீ 21உ யில் வெளியாகிய "பயகாமெ ஸுலஹல்" "கிறிஸ்து மதமும் இந்து மதமும் தத்தம் மதங்களை விட்டவர்களை முர்தத் என்று தீர்ப்பிட்டு அவர்களைக் கொல்வதென்று கூறுகின்றன. மேலுங் கிறிஸ்தவர்களும் இந்துக்களும் தத்தம் மதங்களை விட்டவர்களைக் கொன்றார்களென்றே சரித்திரங்கள் கூறுகின்றன" என்று

வரையப்பட்டிருக்கிறது. இவ்வாதாரங்கள் இதர மதங்களிலும் அம் மதங்களை விடுகிறவர்களைக் கொன்று விடும்படி அநுமதி யளிக்கின் றன வென்பதை ஜனாப் தாவுத்ஷா சாஹிப் அறிவாராக.

“ஆப்கன் அரசாங்கத்தினர் செய்ததைப்போல் ஆங்கிலேயர்க ளும், பிரான்சு, ஜர்மனி முதலிய ஐரோப்பியர்களும் அமெரிக்காவி லுள்ள கிறிஸ்துவ அரசாங்கத்தினரும் நடக்கத் தலைப்படுவாராயின் இவ்வுலகில் இஸ்லாம் மார்க்கம் எத்தனை நாளைக்கு உயிரோடிருக்கு மென்று நினைக்கிறீர்கள்?” என்று ஜனாப் தாவுத்ஷா சாஹிப் கேட்கி றார்கள். இஸ்லாம் மார்க்கம் நிலைநிற்குமோ? நிற்காதோ? என்ற அவ நம்பிக்கை சாகரத்தில் விழுந்து தத்தளிக்கிறார்! அந்தோ!! பரிதா பம்!!! எங்களின் இரக்ஷகபெருமானார் ரஹ்மத்துன்லில் ஆலமீன் ரசூ லே அக்ரம் (ஸல்) அவர்கள் மக்கமாநகரின்கண் திரு அவதாரம் புரிந்து மாசற்ற சத்திய சன்மார்க்க பிரசாரமாகிய இஷா அத்தே இஸ்லாம் என்னும் அரும்பெரும் ஊழியத்தைப் புரிந்து வரும்போது அரபியா விலுள்ள காபிரீன்கள் எல்லோரும் எமது தீனுல் இஸ்லாமை வேரறச் செய்துவிட வேண்டுமென எடுத்த முயற்சிகள் எவ்வாறாயின? நூற் றுக்கணக்கான முஸ்லிம்களை இலட்சக் கணக்கான காபிர்கள் வாளாயு தத்தா லழிப்பதற்கு எடுத்துக்கொண்ட பிரயாசை பூர்த்தி யடைந் ததா? இல்லை. இல்லை.

உமர்ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாளைக் கையிலேந்தின வராய் எங்கள் பெருமானார் ரசூல்கரீம் ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல் லமவர்களைக் கொல்வதற்கு (நவூதுபில்லா) தன் வீட்டைவிட்டுப் புறப் பட்டு நபிநாயகமவர்களைக் காணுமுன் குர் ஆன் என்னும் வாளுக்கிரை யாகி, இஸ்லாமை ஒப்புக்கொண்டு இஸ்லாத்திற்கே தன் உயிரையும் அர்ப்பணஞ் செய்ததை ஜனாப் தாவுத்ஷா சாஹிப் உணரவில்லை போலும்!

தாத்தாரீ, மொன்கோலீ கூட்டத்தார்கள் முஸ்லிம்களைக் கொன்று இஸ்லாமின் நாமத்தையே தரிபடாது பக்தாதை நாசஞ் செய்த அக் கூட்டம் சிறிது நாளைக்குப் பின் இஸ்லாமைத் தழுவிக் கொண்ட சரித்திர உண்மையை ஜனாப் தாவுத்ஷா சாஹிப் அறியவில்லை போலும். இக்காலத்தில் இஸ்லாத்தின் விரோதிகள், அவர்கள் ஆங் கிலேயரானாலுஞ் சரி, ஜர்மனியர்களா யிருந்தாலுஞ் சரி, அமெரிக்கா தேசத்தினரா யிருந்தாலுஞ் சரி, இஸ்லாத்துடன் எதிர்ப்பாராயின் ஏக பரம்பொருளாகிய அல்லாஹ் ஜல்லஷானஹுவத்ஆலா எவ்விதம் எம்பெருமானார் அவர்களுக்கு 1300 வருஷங்களுக்குமுன் வெற்றி

யைக் கொடுத்தானோ அவ்விதமே எங்களுக்குந் தந்தருள்வான். நம் இஸ்லாம் மதத்தை ஆண்டவன் பாதுகாத்துக் கொள்வதாக எமது திருமறையில் (15-97) உறுதியாகக் கூறி யிருப்பதைக் குர்ஆனை மொழிபெயர்க்க முன்வந்த ஜனாப் தாவுத்ஷா சாஹிப் இன்னும் உணரவில்லை போலும் !

மேலும் "நீங்கள் உண்மை விசுவாசிகளாயின் உங்களுக்கு வெற்றி கிடைக்கும்" (3-138) என்று எமதிறைவன் நம் பரிசுத்த பொக்கிஷத்தில் கூறியுள்ளான்.

"எவரும் அஹ்மதி அல்லது காதியானி என்ற காரணத்தினால் யாம் பரிந்துபேசவில்லை; கேவலம் மானுஷீகத் தனத்திற்காகவே மன்றாடுகிறோம்" என்று ஜனாப் தாவுத்ஷாசாஹிப் மொழிகிறார். இவ்விதங் கூறியவர் பேஷாவெனு மோர் இந்திய நகரில் மௌல்வி முஹம்மது சாதிக் என்பவரால், ஈசா (அலை) அவர்கள் உயிரோ டிருக்கிறார்கள் என்று செய்த பிரசங்கத்தைக் கேட்கவந்த முஸ்லிம்களில் ஒரு சாரரைக் காதியானிகள் தாக்கி ஒரு முஸ்லிமைக் கொன்று விட்டதைப்பற்றி மௌனஞ் சாதிக்க வேண்டியதேனோ? காதியானிகளாற் கொல்லப்பட்ட ஒரு முஸ்லிம் சகோதரர்மேல் இரக்கங்கொள்ளாது காபூலில் கொல்லப்பட்ட காதியானிக்கு மாத்திரம் துக்கங் கொண்டாடுவ தேனோ?

விஷயம் அதிகமாய் நீண்டுவிட்டதனால் இத்துடன் இவ்வியாசத்தை நிறுத்துவதுடன் நம் முஸ்லிம் சகோதர சகோதரிகளனைவரிடத்தும் யான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்வதாவது :—

நம் முஸ்லிம் சாகியத்தார்கள் வழிசருகிப் போகாதிருப்பதற்காக வேண்டி மாசற்ற பொக்கிஷமாகிய குர் ஆன் ஷரீபையும் எங்கள் இரக்ஷகபெருமான் சல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் திருவசனத்தையும் எங்களுக்காக ஆண்டவனால் இதுகாறும் பாதுகாத்துக் கொள்ளப்பட்டிருக்கிறன. நாம் ஈடேற்றம் பெற வேண்டுமானால் இவ்விரண்டையும் பின்பற்ற வேண்டியது அத்தியாவசியக் கடமையாயிருக்கின்றது. மேற் குறித்த இவ்விரண்டிலுங் காட்டப்பட்ட வழியை விட்டு வேறுபாதையில் நாம் நடப்போமாயின் ஒருபோதும் நாம் மோக்ஷத்திற் கருகராகோம் என்பதை ஒவ்வொருவரும் அறிந்து கொள்வாராக. நேரான பாதையை ஒப்புக் கொள்ளுகிறவர்களுக்கு சாந்தி யுண்டாவதாக.

A. S. அப்துல்கப்பார்,
அபல்லாஹு அன்ஹு, சபாநாயகர்,
அன்ஜுமனே தப்லீகுல் இஸ்லாம், கொழும்பு.

மௌலானா அபுல்கலாம் ஆஜாத்தும் அல்கலாமும்.

அல்லாஹுதஆலாவின் கிருபையால் பெல்காமில் மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்களைத் தெரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றோம்.

'கிலாபத் கேம்பில் மௌலானா அவர்களுக்குப் பிரத்தியேகமாக அமைக்கப்பெற்றிருந்த ஜாகைக்கு மௌலானா அவர்களைத் தெரிசிப்பதற்காகச் சென்றோம். அச்சமயம் "பெல்காம் கிலாபத்துக் கான்பரன்சின் பிரசிடெண்டாகிய' டாக்டர் சைபுத்தீன் கிச்லூ பாரிஸ்டர் அஸப்அலி முதலியோர் மௌலானா அவர்களிடம் சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். யாம் அங்கு சென்ற பிறகு டாக்டர் சைபுத்தீன் கிச்லூ என்னைப் பார்த்து, " தாங்கள் தங்கள் நாட்டின் முக்கியமான விஷயங்களைப்பற்றி மௌலானா அவர்களிடத்தில் சம்பாஷியுங்கள்" என்று சொல்லிவிட்டு, டாக்டர் கிச்லூ அவர்களும் மற்றவர்களும் வெளியேகிவிட்டனர். ஆதலின் யாம் மௌலானா அவர்களிடம் தாராளமாய்ப் பேச சந்தர்ப்ப மேற்பட்டது.

" அல்கலாம்" சம்மந்தமாய் மௌலானா அவர்களிடத்தில் சொல்லிக் கொள்ளவேண்டிய அவசியமான விஷயங்களைக் கூறிவிட்டுப் பிறகு பைண்டு செய்யப்பட்ட " அல்கலாம்" முதல் வால்யத்தை மௌலானா அவர்களிடம் சமர்ப்பித்தேன். இதை மௌலானா அவர்கள் மிக்க சந்தோஷத்தோடு அங்கீகரித்தது மன்னியில், இது தங்களிடம் சதா இருந்து வருமென்றும் பகர்ந்தார்கள்.

மேலும் மௌலானா அவர்கள் தொடர்ந்து கூறியதாவது:—

" முஸ்லிம்களுக்கு இஸ்லாமின் அறிவைப் போதியளவு ஊட்டாதவரை முஸ்லிம்கள் நன்னிலைமையை யடைவது அசாத்தியம். முஸ்லிம்களின் நன்மையைக் கோறிச் செய்யவேண்டியதாக விருக்கும் அவசியமான காரியங்களுள் தாமதமின்றி உடனே செய்து தீரவேண்டிய காரியம் முஸ்லிம்களுக்கு இஸ்லாமை அறிவிப்பதே. " அல்கலாம் செய்ய ஆரம்பித்திருக்கிற ஊழியத்தை ஒவ்வொரு முஸ்லிமும் செய்ய முற்படவேண்டும். அல்லாஹுதஆலா தங்களுக்குத் தைரியம், உறுதி, நல்லருள் முதலியனவைகளை விசேஷமாக வளித்து, " அல்கலாமை" ஸ்திரப்படுத்தி, இது தேசமெங்கும் வியாபிக்கும்படிச் செய்வானாக" என்று பகர்ந்த பிறகு, யாம் மௌலானா அவர்களை

அல்கலாமுக்கு வியாசமெழுதி அனுப்பிவர வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம்:

மௌலானா அவர்கள்:—"தங்களிடம் என்னுடைய ஏராளமான வியாசங்களிருக்கின்றனவே"

யாம்:—தாங்கள் கூறுவதுண்மையே. ஆயினும் அவைகள் மட்டுமின்றி தாங்கள் இன்று எழுதக்கூடிய வியாசங்களும் அல்கலாமுக்கவசியமெனக் கருதுகிறேன்.

மௌலானா அவர்கள்:—"இன்ஷா அல்லாஹுதஆலா, அல்கலாமுக்கென வியாசமெழுதவும் நேரத்தைஒதுக்கிவைத்துவிடுகிறேன்."

(மௌலானா அவர்கள் அல்கலாமுக்கு வியாசமெழுத ஒப்புக்கொண்டதற்காக நாம் அல்லாஹுதஆலாவுக்கு "ஷுக்கர்" செய்கின்றோம்.)

யாம்:—தாங்கள் எங்களுடைய கிராமங்களுக்கு ஒருமுறை விஜயஞ் செய்ய வேண்டுமெனக் கோருகிறேன்.

மௌலானா அவர்கள்:—இன்ஷா அல்லாஹுதஆலா, தங்களின் அளவற்ற பற்றுனது சந்தேகமின்றி என்னைத் தங்களின் நாட்டிற் கிழுக்குமென்றே நினைக்கின்றேன்.

யாம்:—தாங்கள் எங்கள் வீட்டில் எங்களுடைய விருந்தினராயிருக்க சொர்ப்பனமும் கண்டேன்.

மௌலானா அவர்கள்:—நிச்சயமாக நான் உங்கள் விருந்தினரே. சந்தேகமின்றி நான் உங்கள் விருந்தினராகவே யிருக்கிறேன்.

(இதேவிதமாக மௌலானா அவர்கள் பன்முறை பகர்ந்தார்கள். அப்பொழுது என்னை அறியாமலே கண்களிலிருந்து நீர் ததும்ப ஆரம்பித்தது.)

யாம்:—ஜனங்களின் நிந்தனைக்குப் பயந்து அல்கலாமை நடத்தாமலிருக்க உத்தேசித்துக் கொண்டிருந்த காலை சொர்ப்பனத்தில், "நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுங்கூட ஜனங்களின் நிந்தனைகளினின்றும் தப்பாதிருந்த ஸ்திதியில், நீ நிந்திக்கப்பட்டாலென்ன?" என்று தங்களால் எனக்கு அறிவிக்கப்பட்டது.

மௌலானா அவர்கள்:--நல்ல ஊழியத்திலும் நல்ல ஊழியமாயினுஞ்சரி அதைக்கூட ஜனங்கள் நிந்திக்காமலிருக்கமாட்டார்கள். சந்தேகத்தை மூட்டுவார்கள். பலவற்றைக்கற்பனைசெய்து சாற்றுவார்கள். ஆயினும் முதலாவதாகப் போதியளவு யோசித்து இன்ன காரியத்தை நாம் செய்துதான் தீரவேண்டுமென்று தீர்மானித்துவிட்டால், அதைச் சந்தேகமின்றி எதற்குமஞ்சாமல் உண்மை

யான மனதோடு, அல்லாஹுத ஆலாவின் மீது நம்பிக்கை வைத்து வேலைசெய்ய முற்படவேண்டும். இதற்கு அல்லாஹுத ஆலா விசேஷ பலனை யளிப்பான்.

யாம்:--தங்களை சொர்ப்பனத்தில் தெரிசித்தபோது என்னுடைய பல ஹீனங்களையும் அசந்தர்ப்பங்களையு மெடுத்துக்காட்டி, "அல்கலாமை" நடத்தாமலிருக்கத் தங்களின் சம்மதத்தைப்பெற முயன்றேன். நான் கூறியவைகளை ஒருவாறு தாங்கள் அங்கீகரித்தீர்களாயினும் முடிவாக நான், "அல்கலாமை" நடத்த வேண்டுமென்றே உத்தரவு செய்துவிட்டீர்கள்.

மௌலானா அவர்கள் :—இது ஹிருதயங்களைப் பொருத்த விஷயமாகும். அல்லாஹுத ஆலா தங்களுக்கு விசேஷ நற்கூலியை யளிப்பானாக.

யாம்:—தாங்கள் சிறையினின்றும் விடுதலையாகும்வரை, மாறுதல் வேண்டாக் கொள்கையுடையவனாகத்தா னிருந்தேன். அப்பொழுது திருப்பூர் என்னும் நகரில் நடைபெற்ற எங்கள் மாகாண மகாநாட்டில், ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்கள், "முஸ்லிம்கள் சட்டசபையை உதைத்துத் தள்ளிவிட்டிருக்கும் நிலைமையில் நாம் சட்டசபைக்குப் போவது நியாயமல்லவென்று மகாத்மா கூறியதற்கேற்ப நாம் சட்டசபையைத் தள்ளிவிட்டோமாயினும் முஸ்லிம்களின் ஸ்தானங்கள் பூர்த்தியாகித்தா னிருக்கின்றன. மகாத்மா கூறியதுபோல் முஸ்லிம்கள் சட்டசபையை யுதைத்துத் தள்ளிவிட்டதாகத் தெரியவில்லை. ஆதலின் ஏற்கனவே நாம் செய்திருக்கும் பகிஷ்காரத்தைப்பற்றி இன்று புனராலோசனை செய்யவேண்டியதாக விருக்கின்றது," என்று கூறியபடியால் நான் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்களுடைய வார்த்தையை ஆக்ஷேபித்துக் கூறியதாவது:—"நானும் என் நண்பரும் சதா வேறுபட்ட அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தாலுங்கூட அவருடைய வார்த்தையை ஆக்ஷேபித்து முதல் தடவையாக இம்மகாநாட்டில்தான் பேசுகிறேன். என்னைப்பேசும்படிக் கட்டாயப்படுத்தியதும் இவரே. முஸ்லிம்கள் சட்டசபைக்குச் செல்லக்கூடாதென்று இஸ்லாம் மார்க்க ஆதாரங் காட்டி, எண்ணிறந்த உலமாக்கள் தீர்ப்புசெய்துவிட்டார்கள். உலமாக்கள் செய்த இப்பெருந் தீர்மானத்தை அலக்ஷியஞ்செய்து சட்டசபைக்குச் சென்றுவிட்டவர்களை உண்மை முஸ்லிம்களென்று கூற முடியுமா? இந்நிலைமையில், முஸ்லிம்கள் சட்டசபைக்குச் சென்று

விட்டார்களென்று கூறுவது நியாயமா? "முஸ்லிம்கள் பஹிஷ்காரஞ்செய்துவிடுவார்களென்று நம்பி நாமும் பஹிஷ்காரஞ்செய்தோம், ஆயினும் முஸ்லிம்களுடைய ஸ்தானங்கள் எதுவும் காலியாயிருக்கக் காணோம்" என்று கூறும் நண்பர்களிடத்தில், "இந்துக்களின் ஸ்தானங்கள் எத்தனை காலியாக விருக்கின்றன?" என்று கேட்கவேண்டும் என்பதே. (பிரசங்கத்தில் இதர விஷயங்களுமுண்டு).

மௌலானா அவர்கள்:—தாங்கள் கூறியவைகள் சரியே.

யாம்:—பிரிட்டிஷ் சாமான்களைப் பஹிஷ்காரஞ்செய்ய வேண்டியதைப் பொருத்துத் தாங்கள் "அல்ஹிலாலில்" சில எழுதியிருந்தீர்கள். ஆகவே பிரிட்டிஷ் சாமான்களைப் பஹிஷ்காரஞ்செய்ய வேண்டுமென்பதே தங்களுடைய கொள்கையாக விருக்மென்று கருதி, கயாவில், "அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலும்," "காங்கிரசிலும்" ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் அவர்களுக்கு விரோதமாக ஓட்டுச் செய்தேன்.

மௌலானா அவர்கள்:—"பாய்க்காட் சம்மந்தமாகத் தாங்கள் நடந்துகொண்டதை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்"

யாம்:—மவுலவி முஹம்மத் அலி எம். ஏ., அவர்கள், குர்ஆன்ஷரீபுக்கு ஆங்கில பாஷையில் எழுதியிருக்கும் மொழி பெயர்ப்பு விஷயமாகத் தங்களின் அபிப்பிராயமென்ன?

மௌலானா அவர்கள்:—அம்மொழி பெயர்ப்பு முழுவதையும் எம்மால் பார்க்கக்கூடவில்லை. ஆயினும் சிலவற்றை வாசித்திருக்கிறேன். குர்ஆன்ஷரீபுக்கு ஆங்கிலத்தில் எழுதப்பெற்றிருக்கும் மொழி பெயர்ப்புகளுள் முஹம்மத் அலி எம். ஏ, எழுதியிருக்கும் ஆங்கில மொழி பெயர்ப்பு சிரேஷ்டமானதே. இதை எழுதுவதற்காக முஹம்மத் அலி ஸாஹிப் பெரும் பிரையாசை யெடுத்துக் கொண்டார். ஆதலின் முஹம்மத் அலி எம். ஏ.,யைப் புகழ வேண்டும். ஆனால் அதில் அனேக இடங்களில் (1) உத்தமமான வியாக்கியானங்கள் செய்யப்படாமலும், (2) இன்னும் பல இடங்களிற் குர்ஆன்ஷரீபின் லக்ஷியத்திற்கு விரோதமாய்த் தப்பான வியாக்கியானங்கள் வரையப்பட்டு மிருக்கின்றன.

யாம்:—முஹம்மத் அலி எம். ஏ. அவர்களின் பிரஸ்தாப ஆங்கில மொழி பெயர்ப்பை எங்கள் நாட்டில் ஒருவர் தமிழ் பாஷையில் மொழி பெயர்க்கின்றார்: இது சம்மந்தமாகத் தாங்கள் ஏதும் அறிவிக்கின்றீர்களா?

மௌலானா அவர்கள்:—முஹம்மத் அலி எம்.ஏ., அவர்களின் ஆங்கில மொழி பெயர்ப்பை தமிழ் பாஷையில் மொழி பெயர்ப்பதை யாம் அங்கீகரிக்க முடியாது. முதலாவதாக அதிலுள்ள தப்பா னவைகள் யாவற்றையும் திருத்தி எழுதவேண்டும். அதன் பின்னர் இதைத் தமிழிலோ அல்லது மற்ற இதர பாஷை களிலோ மொழி பெயர்ப்பதால் பாதகமொன்றுமில்லை.

யாம்:—ஈஸாஅலைஹிஸ்ஸலாம் அவர்கள் மரணமடைந்துவிட்டதாக வுள்ள அஹ்மதியாக்களின் கொள்கையைப்பற்றித் தங்களபிப் பிராயமென்ன?

மௌலானா அவர்கள்:—ஈஸாஅலைஹிஸ்ஸலாம் அவர்கள் சம்மந்தமாய் குர்ஆன்ஷரீபில் வரையப்பட்டிருப்பதுள் "முதவப்பீக" என் னும் பதத்திற்குச் சொல்லர்த்தஞ் செய்து, ஈஸாஅலைஹிஸ்ஸ லாம் அவர்கள் மரணமடைந்துவிட்டதாகக் கூறுகிறவர்களும் சிலர் உண்டு. ஆனால் பெரும்பான்மையான இமாம்கள் அப்பதத் திற்குத் தாவீல்செய்து, ஈஸாஅலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஜீவித் திருப்பதாய்த் தீர்மானிக்கின்றார்கள். இதுவே ஜம்ஹூர்களின் கொள்கையாகும். இக்கொள்கையை யேற்றுக்கொண்டாலென்ன? இதுசம்மந்தமாய் விவாதம் புரிந்து கொண்டிருக்கவேண்டிய தவசியமில்லை. அஹ்மதியாக்கள் உண்மையில் "முதவப்பீக" என்னும் பதத்திற்கு சொல்லர்த்தஞ்செய்ய வேண்டுமென்ற கொள்கையுடையவர்களுமல்ல. கடைகாலத்தில் உலகத்திற்கு விஜயஞ்செய்வார்களென்று அறிவிக்கப்பட்டிருக்கின்ற மஹ்தீ யும், ஈசாவும் மிர்ஸாகுலாம் அஹ்மத் ஸாஹிப் காதியானிதான் என்று செய்யப்படும் தாவாவை ஈஸாஅலைஹிஸ்ஸலாம் அவர்கள் தேகத்தோடு உயர்த்தப்பட்டார்களென்பதும், கடைகாலத்தில் தேகத்தோடவே யிறங்குவார்களென்பதும் மறுத்துக்கொண்டி ருப்பதால், இதை ரத்துசெய்வதற்கு அஹ்மதியாக்கள் ஏதாவது தேடி எடுக்கவேண்டியதாகவிருந்தது. "முதவப்பீக" என்னும் பதத்திற்குச் சொல்லர்த்தஞ்செய்து ஈஸாஅலைஹிஸ்ஸலாம் அவர் கள் மரணமடைந்துவிட்டார்கள் என்று சிலர் கூறுவதே தங் களுக்குப்போதிய ஆயுதமென அஹ்மதியாக்கள் கருதுகின்றனர். "முதவப்பீக" என்னும் பதத்திற்குச் சொல்லர்த்தஞ்செய்து ஈஸாஅலைஹிஸ்ஸலாம் மரணமடைந்துவிட்டார்களென வைத்துக் கொண்டாலும், மிர்ஸாகுலாம் அஹ்மத்ஸாஹிபை வாக்களிக்கப் பட்ட "ஈசா" என்றும் "மஹ்தீ" என்றும் கூறுவதற்கென்ன அத்தாக்ஷியிருக்கின்றது? இக்கெட்ட கொள்கையுடையவர்கள் தங்கள் தேசத்திலுமிருக்கின்றார்களா? (தொடரும்.)